My services are 100% FREE
Para Tisi
"Don't wait to buy real estate. Buy real estate and wait."
Call Para 647.299.0599

30 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 30 பாலம்: 23 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 01, 2020

# தொற்று நோய்ப் பரவலைத் தடுப்பதில் தாமதம்!

ஒன்ராறியோ மாகாண அரசு கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலைத்தடுப்பதில் ஆரம்பத்தில் தாமதம் காட்டியிருந்தது என ஒன்ராறியோ மாகாணக் கணக்குப் பரிசோதகர்நாயகம் Bonnie Lysyk 2020 நொவெம்பர் 25இல் வெளியிட்ட விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட அறிக்கை கோவிட்-19 தொற்றுநோய் தொடர்பான ஒன்ராறியோ மாகாண அரசின் நடவடிக்கைகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ளது. முதலாவதாக அவசரகால நிலை நிர்வாகமும் தொற்றுநோய்த் தடுப்பு முறைகளும், இரண்டாவது, தொற்றுநோயின் தீவிர பரவல் நடைபெறும் இடங்களைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்துதலும் விரைவில் முடிவுகள் எடுக்கும் முறைகளும், மூன்றாவது கோவிட்-19 நோய்ப் பரிசோதனைகள், நோய் உறுதிப்படுத்தப்பட்டவர்களின் நடவடிக்கைகளை அவதானித்தல், மற்றும் நோய்த் தொற்று ஏற்பட்ட முறையைத் தடமறிந்து நடவடிக்கைகள் எடுத்தல் என்பனவாகும்.

ஒன்ராறியோ மாகாண அரசின் காலதாமதமான நடவடிக்கைகளுக்குக் காலாவதியான அவசரகாலத் திட்டங்கள், போதுமான அளவு பணியாட்கள் இல்லாமை, தலைமை அதிகாரிகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம், நோய் தொற்றலைப் பரிசோதனை செய்வதற்குப் போதிய அளவு ஆய்வுக்கூட வசதிகள் இல்லாமை போன்ற பல்வேறு காரணங்கள் உடந்தையாக இருந்தன.

இந்த 231 பக்க அறிக்கையில் உள்ள முக்கிய விடயங்களாக ஐந்தை ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

முதலாவது, கோவிட்-19 தொற்றுநோய் பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்க அமைக்கப்பட்ட நிர்வாகத்தில் குழப்பமான நிலை இருந்தது. இந்த நிர்வாக அமைப்பு அதி சிக்கலான அமைப்பாக இருந்தது. ஆரம்பத்திலிருந்த 21 உறுப்பினர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரிக்கப்பட்டது. இவர்கள் 500 பேரிடம் ஆலோசனை பெறவேண்டி இருந்தது. யூலை 14ஆம் திகதிவரை இவர்களுக்கு இடையேயான கலந்துரையாடல்கள் தொலைபேசி மூலமே நடைபெற்றது. இதன்பின்னர் காணொளி மூலமான கலந்துரையாடல்களுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.



இரண்டாவது, ஒன்ராறியோ மாகாண அரசு கோவிட்-19 தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு ஆலோசனை வழங்கத் தனியார் ஆலோசக நிறுவனம் ஒன்றை ஒப்பந்தம் செய்து வைத்திருந்தது. ஒன்ராறியோ மாகாண அரசு அவசர நிலையை 2020 மார்ச் 17இல் அமல் படுத்தி இருந்தும் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆலோசகரின் அணுகு முறைகளை நடைமுறைப்படுத்தப் பல வாரங்கள் எடுத்தன. இந்த ஆலோசக நிறுவனத்துடனான முதல் கூட்டம் ஏப்ரல் 11இல் தான் நடைபெற்றது.

மூன்றாவது, 2003ஆம் ஆண்டில் SARS தொற்றுநோய்ப் பரவலில் இருந்து கற்றுக் கொண்ட விடயங்கள் செயல்படுத்தப்படவில்லை. SARS தொற்றுநோய்ப் பரவலை ஆராய்ந்த விசாரணைக்குழு தொற்று நோய்ப் பரவலின் ஆரம்பத்திலேயே தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது SARS தொற்றுநோய்ப் பரவலில் கற்றுக்கொண்ட முக்கிய படிப்பினை என்று கூறியிருந்தது. ஆனால் கோவிட்-19 தொற்றுநோயின் ஆரம்ப மாதங்களில் மாகாண அரசாங்கம் முடிவெடுப்பதில் தாமதங்கள், முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் இருந்ததை ஒன்ராறியோ மாகாணக் கணக்குப் பரிசோதகர்நாயகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நான்காவது, ஒன்ராறியோ மாகாணத்தின் முதன்மைப் பொது சுகாதார மருத்துவரான வைத்தியர் David Williams அவர்கள் சுகாதார பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் தனது அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. Bonnie Lysyk தனது அறிக்கையில் வைத்தியர் David Williams ஒன்ராறியோ மாகாணத்தின் பிராந்திய சுகாதார அதிகாரிகளுக்கு மாகாண அரசின் சார்பில் உத்தரவுகள் வழங்கவில்லை எனவும், பிராந்திய சுகாதார சபைகளுக்கு மாகாணம் தழுவிய ஒரு பொது நடைமுறைச் செயற்பாடுகளைக் கடைப் பிடிக்க வலியுறுத்தவில்லை எனவும் தெரிவித்துள்ளார்

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள 34 பிராந்திய சுகாதார சபைகளைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து கூட்டாக ஓர் ஆவணத்தைத் தயாரித்துக் கையெழுத்திட்டு மே மாதத்தில் ஒன்ராறியோ மாகாணத்தின் முதன்மைப் பொது சுகாதார மருத்துவருக்கு அனுப்பி இருந்தனர். அதில் அவர்கள், மாகாண அரசு, பிராந்திய சுகாதார சபைகளுக்கு எவ்வாறு செயற்பட வேண்டும் என உத்தரவு வழங்க வேண்டும் எனவும், அது மாகாணம் முழுவதும் அதாவது 34 பிராந்திய சுகாதார சபைகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது, Bonnie Lysyk தனது அறிக்கையில் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள 34 பிராந்திய சுகாதார சபைகளும் சுதந்திரமாகத் தமது சொந்தத் திட்டப் படியே இயங்குகின்றன. அவை தமக்கிடையே அறிக்கைகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதில்லை. 15 வருடங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட SARS

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant


BUY & SELL REAL ESTATE..
Pat Pushpakanthan
Full Time Broker
416 894-1187
19 Years exp
Listing Deal!!
HALL OF FAME
416-290 1200

உவகை
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Realtor
416.624.4803
suku07@hotmail.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com





# குருச்சேத்திரம் : மகாபாரத போரும் பகவத்கீதையின் பிறப்பிடமும்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

இந்துக்களின் புனித தலமான குருச்சேத்ரம் டெல்லியில் இருந்து 150 கி.மீ தொலைவில் ஹரியானா மாநிலத்தில் அமைந்துள்ளது. அஸ்த்தினாபுரத்தின் அரியணைக்காக பங்காளிகளான பாண்டவர்களுக்கும் மற்றும் கௌரவர்களுக்கும் இடையே மகாபாரதப் போர் 18 நாட்கள் குருச்சேத்ராவில் நடந்ததால் புராணங்களிலும் மற்றும் புனித நூல்களிலும் குருச்சேத்ராவை மகாபாரத நிலம் என்று அழைக்கப்படுகிறது.

மகாபாரதப் போர் தொடங்கவிருந்தபோது, கௌரவர்களின் படையில் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருப்பதால் அருச்சுனன் போரிட மறுத்தார். இதனைக்கண்ட அர்ஜுனனின் தேரோட்டியான கிருஷ்ணர், தர்மயுத்தம் செய்யும் போது உறவுமுறைகள் குறுக்கிடக்கூடாது என்று எடுத்துக் கூறியதுடன் மேலும் தத்துவம், தர்மம், கர்மம், பக்தி மற்றும் ஞான யோகங்கள் போன்றவை பற்றியும் உபதேசம் செய்து அர்ஜுனனை போருக்கு ஆயத்தப்படுத்தினார். போரின் இறுதியில் கௌரவர்களை வீழ்த்தி பாண்டவர்கள் வென்றனர். போர்களத்தில் கிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடந்த உரையாடல்களின் கருத்துக்கள் பின்னர் பகவத் கீதையாக மலர்ந்தது. இதன் காரணமாக குருச்சேத்ராவை பகவத் கீதையின் பிறப்பிடம் என்றும் கருதப்படுகின்றது.




மகாபாரதப் போருக்குப் பின் அஸ்த்தினாபுரத்தை (தற்போதைய மீரட்) தலைநகராகக் கொண்ட குருநாடும் இந்திரப்பிரஸ்தாவும் (தற்போதைய டெல்லி) ஒன்றிணைக்கப்பட்டு அஸ்தினாபுரத்தின் மகுடத்தை தர்மர் அணிந்து குருநாட்டின் மன்னர் ஆனார். தற்போதைய இந்திய அரசாங்கம் மீரட்டையும் (அஸ்தினாபுரம்) - டெல்லியையும் (இந்தரபிரஸ்த்தா) 82 கி.மீ தூரத்தை இந்தியாவின் முதல் பதிநான்கு வழிச்சாலை மூலம் இணைத்து பாண்டவர்களுக்கும் அவர்கள் ஆண்ட நாட்டுக்கும் அர்ப்பணம் செய்து இந்திய மக்களைப் பிரமிக்க வைத்துள்ளனர்.

குருச்சேத்ராவில் முக்கியமாகக் காண வேண்டிய இடங்கள் யாதெனில் (1) பிரம்மா சரவோர் - இப்புனித குளத்தில் நீராடுவதன் மூலம் உடல் மற்றும் உள்ளம் தூய்மையாவதாக நம்பப்படுகின்றது. இக் குளத்தில் சூரிய கிரகணத்தின்போது நீராடுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.




பிரம்மா புனித குளத்தின் நடுவில் சிவன், காளி தேவியின் ஆலயம் மற்றும் 35 அடி உயரமுள்ள கிருஷ்ணர் - அர்ஜுனனின் வெண்கல ரதம் உள்ளன. (2) ஜோதிசர் - இங்குள்ள ஆலமரத்தின் கீழ் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அநீதிக்கு எதிராகப் போரிட உபதேசம் செய்ததால், இந்த இடத்தை பகவத்கீதை பிறந்த இடம் என்று கருதப்படுகின்றது.

மேலும் புராணங்களின் படி, மகாபாரதப் போர் இந்த இடத்தில் இருந்து தொடங்கியதாவும் குறிப்பிட்டுள் ளது. (3) பீஷ்மரின் அம்புப் படுக்கை - மகாபாரதப் போர்களத்தில் அர்ஜுன் எய்த எண்ணற்ற அம்புகள் பீஷ்மரின் உடலில் உடுருவியதும் அவர் போர்க் களத்தில் அந்த அம்புகளை படுக்கையாக கொண்டு வீழ்ந்த இடம். மேலும் போரின் பத்தாவது நாளில் அம்புகளினால் காயம் அடைந்த பீஷ்மரின் தாகத்தை தீர்க்க அர்ஜுன் அம்பு எய்து உருவாக்கிய பீஷ்மர் குண்ட் என்னும் கங்கை நீரோடையும் இங்கு



காணலாம். (4) பத்திரகாளியம்மன் கோயில் - இந்த ஆலயம் 51 சக்தி பீடங்களில் ஒன்றாகும். (5) திரௌபதை கிணறு - போரின் முடிவில் துரியோதனன் கொல்லப் பட்டவுடன், திரௌபதி தன்னை அவமானப் படுத்திய துரியோதனனின் இரத்தத்தை எடுத்து தனது சுருள் முடியை இந்த கிணற்று நீரில் கழுவி நீராடி தனது சபதத்தை நிரைவேற்றினாள். இக்கிணறு இன்றும் பாதுகாக்கப்பட்டு பூஜிக்கப்படுகின்றது.

குருச்சேத்ராவைச் சுற்றிப்பார்ப்பதற்கு ஒரு நாள் போதுமானது. இங்கு நவீன ஹோட்டல் வசதிகள் அதிகம் இல்லை. இருப்பினும் நல்ல தரமான தர்மசாலைகள் உள்ளன.

# தொற்று...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விசாரணைக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி இந்த 34 பிராந்திய சுகாதார சபைகளை ஒருங்கிணைக்கும் எந்த முயற்சியும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் மற்றும் குவிபெக் மாகாணங்களில் உள்ள பிராந்திய சபைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்கமைப்புகள் ஒன்றாரியோ மாகாண சபைகளுக்கு இடையே இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.



Ontario Auditor General: Bonnie Lysyk

ஒன்ராறியோ மாகாண முதல்வர் Doug Ford இந்த விசேட அறிக்கையை காரசாரமாக விமர்சித்துள்ளார். "இந்த அறிக்கையில் பல தவறுகள் உள்ளன, வைத்தியர் David Williams கோவிட்-19 தொற்று நோய்த் தடுப்பு முறைகளைத் தலைமை தாங்கி வழி நடத்தவில்லை என்பது முற்றுமுழுதாகத் தவறான விடயம். இவ்வாறான தவறுகளுடன் கூடிய அறிக்கையை ஏற்க முடியாது. Bonnie Lysyk அலுவலகத்தினுள் இருந்து கொண்டு கைக்குண்டுகளை வைத்தியர் David Williams மீதும் சுகாதார அமைச்சர் மீதும் வீசுவது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. அவர் ஒரு வைத்தியர் இல்லை, கணக்குப் பரிசோதகர்நாயகம். கணக்குகளைப் பரிசோதிக்கும் வேலையை மட்டுமே அவர் செய்ய வேண்டும்" என்று ஒன்ராறியோ மாகாண முதல்வர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

குவிபெக் மாகாணத்தின் கோவிட்-19 நடவடிக்கைகளை எடுத்துக்காட்டாகத் தனது அறிக்கையில் குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டிய Toronto Sun ஊடகம், கோவிட்-19 தடுப்பில் கனடாவில் மிகவும் மோசமான சுகாதார சாதனைகளைக் கொண்டுள்ள குவிபெக் மாகாணத்தைப் போல் ஒன்ராறியோ மாகாணம் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என எவ்வாறு Bonnie Lysykஆல் ஒப்பிட முடிந்தது எனக்கேட்டுள்ளது.

மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தும் நீண்ட காலமாக நிறுவனங்களைப் பூட்டி வைத்தும், கோவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறும் குவிபெக் மாகாணத்தை எவ்வாறு எடுத்துக்காட்டாகக் கணக்குப் பரிசோதகர் நாயகம் தனது அறிக்கையில் கூறினார்? குவிபெக் மாகாணத்தில் ஒவ்வொரு இலட்சம் பேருக்கு 81 பேர் இறந்துள்ளனர். ஆனால் ஒன்ராறியோ மாகாணத்தில் ஒவ்வொரு இலட்சம் பேருக்கு 24 பேரே இறந்துள்ளனர் என்று Toronto Sun ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒன்ராறியோ மாகாண அரசின் சுகாதார அமைச்சர் Christine Elliott ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் "Bonnie Lysyk இனுடைய அறிக்கையில் பல தவறுகள் இருக்கின்றன. இவ்வறிக்கை எங்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே தந்துள்ளது. பல விடயங்கள் தவறாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளன" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்த அறிக்கையை பிரசுரிக்க முன்னரே சில தவறுகளை நாங்கள் சுட்டிக்காட்டித் திருத்த முயன்றோம். ஆனால் Bonnie Lysyk அவற்றைத் திருத்த மறுத்துவிட்டார்" என்றார்.

ஒன்ராறியோ மாகாண புதிய ஜனநாயகக் கட்சியின் துணைத் தலைவர் John Vanthof ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், ஒன்ராறியோ மாகாண அரசு அண்மையில் வைத்தியர் David Williamsஇன் முதன்மை பொதுச் சுகாதார மருத்துவர் பதவியை 2021 செப்ரெம்பர் வரை நீடித்துள்ளது. ஏனெனில் ஒன்ராறியோ மாகாண அரசு போடும் தாளத்திற்கேற்ப அவர் ஆடுகிறார் என்றார்.

ஒன்ராறியோ மாகாண லிபரல் கட்சித் தலைவர் Steven Del Duca ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் இந்த அறிக்கை கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலை தடுப்பதில், ஒன்ராறியோ மாகாண அரசின் திறமையின்மையை வெளிக்காட்டுகிறது என்றார். பழமைவாதக் கட்சியின் தற்போதைய ஒன்ராறியோ மாகாண அரசு 2018 யூனில் பதவிக்கு வந்தது. ஆனால் அதற்கு முன்னர் 15 வருடங்களாகப் பதவியில் இருந்த லிபரல் கட்சியின் மாகாண அரசும் SARS விசாரணைக் குழு தெரிவித்த பரிந்துரைகளை அமல்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கோவிட் -19 தடுப்பூசி போட கனடா தயாராகிறது!

2020 நொவெம்பர் 27இல் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கனடாவில் கோவிட்-19 தடுப்புமருந்துகளை நாடு முழுவதும் விநியோகம் செய்வதற்காக கனடிய இராணுவத் தளபதி Maj. Gen. Dany Fortinஇனுடைய தலைமையில் 30 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று அறிவித்தார்.

30 வருட ராணுவ சேவை அனுபவம் கொண்ட இராணுவத் தளபதி Maj. Gen. Dany Fortin ஆப்கானிஸ்தானில் நேட்டோ இராணுக் குழுவிற்கு தளபதியாக இருந்து வழிநடத்தியவர். இதனால் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் கனடா காணப் போகும் ஒரு மிகப்பெரிய அணிதிரட்டி வழி நடத்தப்பட இருக்கும் இந்த நிகழ்விற்கு அனுபவம் மிக்க ஓர் இராணுவத் தளபதி மிகவும் சரியானவர் என கனடியப் பிரதமர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

Maj. Gen.Dany Fortinஇற்கு உதவி புரிய மேலும் இரண்டு அடுத்த நிலை இராணுவத் தளபதிகளான Brig. Gen. Simon Bernardஉம் Brig.Gen. Krista Brodie உம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கனடியப் பொது சுகாதார அமைப்பு டிசம்பர் 2020இல் தடுப்பூசி மருந்துகளின் பரிசோதனையை முடித்து பொது மக்களுக்கு அவற்றை போடுவதற்கான அனுமதியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆரம்ப முன்னுரிமை பெற்ற குழுக்களுக்கு 2021 ஜனவரியில் ஆரம்பித்து 2021 மார்ச்சில் தடுப்பூசிகள் போடப்பட்டு முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் பொது மக்களுக்கான தடுப்பூசி போடுதல் ஆரம்பிக்கப்படும். கனடியப் பிரதமர் 2021 செப்ரெம்பர் மாதம் முடிவதற்கிடையில் கனடியப் பொது மக்களில் அரைவாசிப் பேருக்கு கோவிட்-19 தொற்று நோய்க்கான தடுப்பூசி போடப்பட்டுவிடும் என தான் எதிர்பார்ப்பதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

கனடியப் பொது சுகாதார சேவையின் துணைத்தலைவரான வைத்தியர் Haward Njoo ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில், இதுவரை எந்த ஒரு தடுப்பூசிகான அனுமதியையும் கனடிய பொதுச் சேவை வழங்கவில்லை. ஆனால் 2020 டிசம்பர் மாதம் முடிவதற்கிடையில் Pfizer மற்றும் Moderna நிறுவனங்கள் தயாரித்துள்ள கோவிட்-19 தொற்று நோய்க்கு எதிரான தடுப்பு ஊசிகள் கனடாவில் பரிசோதனை செய்யப்பட்டு கனடியப் பொதுசுகாதார சேவை கனடியர்



Major General Dany Fortin

களுக்கு அவற்றைப் பாவிப்பதற்கான அனுமதியை வழங்கும் என தான் எதிர்பார்ப்பதாகக் கூறினார். இவற்றிற்கு அனுமதி கிடைத்தவுடன் ஆறு மில்லியன் தடுப்பூசிகள் 2021 ஜனவரி, பெப்பிரவரி மாதங்களில் கனடாவுக்குத் தரவிக்கப்படும் என்றார். இந்த இரண்டு நிறுவனங்களின் தடுப்பூசிகள் மட்டும் அல்லாமல் இன்னும் ஐந்து நிறுவனங்களின் தடுப்பூசிகள் தற்போது கனடாவில் பரிசோதனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.


# யோகா பற்றிய விளக்கம்



யோகா என்பது ஒருவரது உள்மன பலத்தினை அதிகப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தும் முறையாகும். இம்முறையில் ஒருவர் தான் யார் என உணர வைத்து விடும். யோகாவின் சமஸ்கிரத அர்த்தமாக இருப்பது 'நுகம்' ஆகும். ஆகவே யோகா என்பது ஒருவரது தனி ஆன்மாவை கடவுளின் ஆன்மாவோடு இணைப்பதாகும். மகரிஷி பதஞ்சலி கூற்றின்படி யோகா என்பது ஒருவரது மனதினை கட்டுப்படுத்தி முறைப்படுத்துவதாகும்.

## எங்கெங்கு காணினும் சக்தியடா என்றார்

## எங்கள் பெருமை உணர்ந்த புரட்சிக்கவி



எங்கள் பெருமையை உணராப் புழுக்களே!
எங்களால் உங்களை நசுக்கவும் முடியும்
எங்களோடு வாழ நினைத்தால் வாழுங்கள்
எங்களைப் புறக்கணிக்க நினைத்தால் நினையுங்கள்!
புறக்கணிக்கப் படப்போவது நாங்களல்ல, நீங்கள்தான்!
புறக்கணிக்கப் போவது பெண் சமுதாயமே!
பெண்ணெனும் கோவிலை என்றும் மறவாதே!
பெண்மையை அனுதினமும் போற்றிட மறந்திடாதே!
பெண்மையும் ஆண்மையும் ஒருங்கே இணைந்தால்
பெற்றிடுவோம் வாழ்வில் பெரும் பேறு!
இதுவே ஓர் அபலையின் அன்புக் கட்டளை!
மதுவை விடக் கொடியவர்கள் நாங்கள்
மதுவால் அழிந்த மன்னரை விட
மாதுவால் அழிந்த மன்னரே அதிகம்!
கண்டதே காட்சி கொண்டதே கோலமென
கசக்கிப் பிழியும் கயவர் கூட்டமதில்
கன்னிப் பெண் காலங் கழிப்பதெப்படி?
கற்றோரே நீங்கள் தான் கூறவேண்டும்

K. சேஷாத்ரி

# நாமும் நமது இல்லமும் 572

## வட்டிவீத உரையாடல்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பொதுவாக அடமானக் கடன் பெறும்போது கடன் பெறுபவர் கேட்கும் இரு கேள்விகள்.

முதலாவது அடமானக் கடனின் வட்டி வீதம் என்ன? இரண்டாவது அடமானக் கடனுக்குரிய மாதாந்த கட்டுப்பணம் எவ்வளவு? ஆனால் இந்த இரண்டு கேள்விகளை விட அவர்களுக்கு மேலும் பல முக்கியமான தகவல்கள் தேவைப் படும் என்பதை பலர் மறந்து விடுகின்றனர். அவ்வாறான சிலவற்றை இந்த ஆக்கத்தில் பார்க்கலாம்.

நிச்சயமாகக் குறைந்த வட்டி வீத அடமானக் கடன் பெறும்போது மாதாந்தக் கொடுப்பனவில் சிறு பகுதி வட்டிக்கும் அதிக பகுதி கடனின் முதலுக்கும் செல்லும். அனைவரும் விரும்புவதும் இதுவே. நல்லதும்தான்.

பொதுவாக அடமானக் கடன்பெறும்போது இரண்டு விதமான முறையில் வட்டி வீதங்கள் அறவிடப்படுகின்றன.

**1. மாறாத வட்டி வீதம்** (Fixed Rate)

2.**மாறுகின்ற வட்டி வீதமும்** (Variable Rate)

**மாறாத வட்டி வீதம்** : மாறாத வட்டி வீதம் என்பது, அடமானக் கடன் ஐந்து (5) வருடமாக இருந்தால், ஐந்து வருட காலமும் மாதாந்தம் செலுத்தும் அடமானக் கடனின் வட்டி வீதம் மாறாமல் காணப்படும்.

முதல் தடவையாக ஆதனம் வாங்கு வோரின் தெரிவு மாறாத வட்டிவீதமாகவே காணப்படுகிறது. இதில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. நன்மையானது மத்திய வங்கியின் வட்டி வீதம் அதிகரித்தாலும் அடமானக் கடனின் வட்டி வீதம் மாறாது. மறுதலையாக வங்கியின் வட்டி வீதம் குறைந்தாலும் அதன் நன்மையையும் பெறமுடியாது.

**மாறுகின்ற வட்டிவீதம்**: இந்த வட்டிவீதம், கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தைக் குறைத்து அல்லது கூட்டும்போது அதற் கேற்ப அடமானக்கடன் வட்டி வீதமும் மாறும். இதற்கேற்ப மாதாந்தக் கொடுப்ப னவும் மாற்றமடையும். எனினும் ஆதனக் கொள்வனவு செய்யும் சிலர் வட்டி வீதம் கூடினாலும் குறைந்தாலும் குறிப்பிட்டளவு மாதாந்தக் கொடுப்பனவை மாறாமல் செலுத்தி வருவர். இதனால் வட்டி வீதம் குறையும்போது அதிக பணம் முதலிற்கும் வட்டி வீதம் கூடும்போது குறைந்தளவு பணம் முதலுக்கும் செல்லும். இதுவும் ஒரு சிறந்த அணுகுமுறை.

**நிபந்தனைகள் மற்றும் தண்டனைகள்:**

உதாரணமாக ஐந்து வருட மாறுகின்ற வட்டிவீதம் 2.05% ஆகவும் ஐந்து வருடம் மாறாத வட்டிவீதம் 1.95% எனவும் கொள்வோம். இச்சந்தர்ப்பத்தில் மேலதிக மாக மாதாந்தக் கொடுப்பனவை செய்ய முடியுமா? இக்கடனை ஐந்து வருடத்திற்கு



முன்பாக திருப்பிக் கொடுக்க முடியுமா? அப்படித் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் எவ்வாறான தண்டம் அறவிடப்படும் அல்லது செலுத்த வேண்டி வரும்?

ஏற்கனவே உள்ள புள்ளிவிபரங்களின் பிரகாரம் 70%ஆன அடமானக் கடன்கள் ஐந்து வருட காலத்தை முற்றாகக் கடப்ப தில்லை. இதனால் ஐந்து வருடத்திற்கு முன்பாகவே கடனை முறிக்க வேண்டி வரும், இடையில் முறிப்பதால் நிதி நிறுவனத்திற்குத் தண்டப்பணம் செலுத்த வேண்டியுள்ளது. மாறாத வட்டி வீதத்தில் வட்டி வீத வித்தியாசத்தினால் ஏற்படும் தொகையைத் தண்டமாகச் செலுத்த வேண்டும்.

வட்டி வீதத்தில் வித்தியாசம் என்பது அடமானக் கடன் பெற்ற காலத்தின் மீதி யுள்ள காலத்திற்குரிய வட்டி வீதத்திற்கும் நீங்கள் கொடுப்பனவு செய்யும் வட்டி வீதத்திற்கு உள்ள வித்தியாசத்தைக் கொண்டு தண்டனைத் தொகை கணிக்கப் படும். ஆனால் பொதுவாக மாறுகின்றது அடமான கடனில் மூன்று (3) மாத வட்டி மட்டும் செலுத்தினால் போதும். ஒப்பிடும் போது, மாறுகின்ற வட்டி வீதத்தினால் வரும் தண்டம் மிகவும் குறைவாகவே காணப்படும்.

குறிப்பிட்ட அட மானக் கடனை இப்போதைய ஆதனத்தை விற்று வேறு ஆதனம் வாங்கும்போது, ஏற்கனவே இருக்கும் அடமானக் கடனை புதிய ஆதனத்திற்கு மாற்ற முடியுமா? இது அடமானக் கடனில் கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம்.

**வழக்கமான அடமானமும் உயர் விகித அடமானமும்** (Conventional Mortgage and High Ratio Mortgage)

அடமானக்கடன் பெறும்போது, ஆதனத் தின் விலையின் 20%இற்கு அதிகமாக முதலீடு செய்தால் வழக்கமான அடமானம் எனவும், ஆதனத்தின் விலையின் 20% இற்குக் குறைவான முதலீடு செய்தால் உயர் விகித அடமானம் எனவும் அழைக்கப்படும். எனினும் சகல ஆதனம் வாங்குனர்களாலும் விலையில் 20% முதலீடு செய்து ஆதனம் வாங்குவது என்பது இலகுவல்ல. இதனால் 20% இற்குக் குறைவான முதலீட்டுடன் ஆதனம் வாங்கக்கூடிய வசதிகள் உண்டு. பொதுவாக 20%இற்கு குறைவாக முதலீடு செய்யும்போது, பாதுகாப்பு காப்புறுதி செய்ய வேண்டும். இதற்கேற்ப வசதியை மத்திய அரசு செய்துள்ளது.

இவ்வகையான காப்புறுதியை இயல்பு நிலை காப்புறுதி (Default Insurance) எனப்படும். இதற்குரிய காப்புறுதிச் சந்தா (Insurance Premium) அடமானக் கடனுடன் சேர்த்துக் கொள்ளப்படும். அடமானத்திற் குரிய மாதாந்தக் கொடுப்பனவு செய்யும் போது, இதற்கும் சேர்த்தே மாதாந்தக் கொடுப்பனவு செய்தல் வேண்டும். எனவே ஒரு அடமானக் கடனைப் பெறும்போது மேலுள்ள விடயங்களையும் மனதில் வைத்து தனிப்பட்ட பொருளாதார நிலமை யையும் கருத்தில் கொண்டும் அதற்கேற்ப, அடமானக் கடனைப் பெறுவது சிறந்தது என்பதே எனது எண்ணம்.




## மாற்றம் நல்லது

உங்கள் மனசுக்கு சில விடயங்கள் சரியில்லை என்று நினைகிறீர்களா?

குடும்பத்தோடு நேரம் செலவழிக்க முடியவில்லை, நடைபயிற்சி தொடங்கினோம். ஆனால் தொடர முடியவில்லை, நல்ல புத்தகம் வாங்கினோம். ஆனால் படிக்க முடியவில்லை, வேறு வேலை தேடுகிறோம். கிடைக்கவில்லை, கல்யாணத்துக்குப் பெண்ணோ / பையனோ கிடைக்கவில்லை, புகை/மது பழக்கத்தை நிறுத்த முடியவில்லை, இப்படி ஏதாவதொரு 'இல்லை' நமக்கு எப்போதுமே உண்டு.

இல்லைகளை இல்லாமல் ஆக்க நீங்கள் மனதளவில் முதலில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். ஒரு புகழ்பெற்ற மனிதரின் அறிவுரை உங்களுக்கு மிகவும் உதவும்.

கடந்த 33 வருடங்களாக, தினமும் காலையில் கண்ணாடியை பார்த்து என்னை நானே கேட்டுக்கொள்வது "இந்த நாள் உன்னுடைய கடைசி நாளாக இருந்தால் இன்று செய்துகொண்டு இருப்பதை தொடர்ந்து செய்வாயா?"

எப்போதெல்லாம் 'இல்லை' என்ற பதில் தொடர்ந்து சில நாட்கள் வருகிறதோ, அப்போதே எனக்குத் தெரியும் நான் எதையாவது மாற்ற வேண்டும் என்று. - ஸ்ரீவ் ஜொப்ஸ்"

இவர் போல் நாம் இருக்க முடியுமோ முடியாதோ. நாமும் சிலவற்றை மாற்ற முயலலாம். பல 'இல்லை'களை தவிர்த்து, சில சின்ன 'இல்லை'களோடு வாழலாம்.

# பிட்டு - பீட்சா கதை - தமிழ் மக்கள் மீதான எள்ளலா?

- விகிர்தன் -

வட மாகாண மக்கள் சோறும், பிட்டும், வடையும் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது, அவர்கள் பீட்சா சாப்பிடும் நிலையை உருவாக்கினோம் என்று கூறிய பொலிஸ் அதிகாரி ஒருவர் பின்னர் தான் கூறிய கருத்திற்காக மன்னிப்புக் கோரினார்.

மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில், நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த யாழ். பொலிஸ் நிலைய அதிகாரி மேற்படி வார்த்தைகளை பிரயோகித்திருந்தார்.

இதற்கு தமிழர் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பின. நாடாளு மன்றத்திலும் இவ்விடயம் பேசப்பட்டது. இந்த நிலையில் தான் தெரிவித்த கருத்திற்கு நீதிமன்றத்தில் வைத்தே அவர் மன்னிப்புக் கோரினார்.

இந்தப் பொலிஸ் அதிகாரி கூறிய கருத்துக்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய உணவு பழக்கவழக்கங்களை குறைத்து மதிப்பிடுவதாகவோ அல்லது கேலி செய்வதாகவோ அமைந்திருப்பது ஒருபுற மிருக்க, சிங்களவர்கள் மத்தியில் தமிழ் மக்களின் போராட்டம் குறித்த புரிதலற்றவர்கள் பலர் இருக்கின்றனர் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

சிங்களவர்களில் சாதாரண மக்கள் தொடக்கம், படித்தவர்கள் வரையில் தமிழர்கள் எதற்காகப் போராடுகின்றனர், தமிழ் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை இன்னும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

எனது நண்பரான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நான் சந்திக்கச் சென்றபோது அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் என்னிடம் சாதாரணமாக உரையாடினார். “இந்த சண்டை நடை பெறாமலிருந்திருந்தால் வடக்கிற்கான பிரதான வீதி எப்போதோ ‘காப்பெற்’ வீதியாக செப்பனிப்பட்டிருக்கும், விடுதலைப்புலிகள் இதைப்பற்றியெல்லாம் யோசிக்காமல் தானே சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள்?” என்றார். எனக்கு அவர் கூறியது ஆச்சரியமாக இருந்தது. ‘காப்பெற்’ பாதைக்காக இங்கு போராட்டம் நடக்கவில்லை என்று மட்டும் சிரித்துக் கொண்டே அவரிடம் சொல்லி வைத்தேன்.

சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டபோது, சிங்கள ஊடகவியலாளர்கள் வடக்கிலிருந்து சென்றிருந்த தமிழ் ஊடகவியலாளர் களுடன் ஆர்வத்துடன் கலந்துரையாடினர். மதியம் உணவருந்திக் கொண்டிருந்த போது இளைஞரான சிங்கள ஊடக வியலாளர் ஒருவர் “நாம் இப்போது இனம், மதம் பாராது ஒன்றாக இருந்து உணவருந்துகின்றோம், இப்படித்தான் இருக்க வேண்டும் இந்த நாட்டில் யாரும் வேலிகளை அமைத்துக் கொண்டு தனித்திருக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது” என்றார்.



எனதருகிலிருந்த, யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த இளைஞரான தமிழ் ஊடகவியலாளர் “அவர் என்ன கூறுகின்றார்?” என்று என்னிடம் கேட்டார். நான் அந்த சிங்கள இளைஞர் சொன்னதை தமிழில் விளக்கினேன். சட்டென்று தமிழ் இளைஞருக்கு கோபம் வந்து விட்டது. “தமிழர்களின் காணிகளில் இராணுவத்தினர்தான் முட்கம்பி வேலிகளை அமைத்துக் கொண்டிருக்கின்றனர் என்று அவரிடம் கூறுங்கள்” என்றார். அவரது முகத்தையும், அவர் கூறிய தொனியையும் அவதானித்த சிங்கள இளைஞர் “என்ன சொல்கின்றார்?” என்று கேட்டார். தமிழ் மக்களுக்கு சொந்தமான, அவர்களின் குடியிருப்புக் காணிகளில் இராணுவத்தினர் தான் வேலியடைத்துக் கொண்டு இருக்கின்றனர் என்று அவர் சொன்னதை சிங்களத்தில் கூறினேன். அவரது முகம் வியப்பை வெளிக்காட்டியது.

“அப்படியா? உண்மையாகவா? உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் திடம் இது பற்றி கதைப்பதில்லையா?” என்றார்.

“நாடாளுமன்ற உறுப்பினர்கள் கதைத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். காணி களுக்கு உரித்தான மக்கள் போராட்டங் களையும் நடத்திக் கொண்டிருக்கின்றனர் நீங்கள் இது பற்றியெல்லாம் அறிந்திருக்க வில்லையா?” என்று அவரிடம் கேட்டேன். இல்லை என்பதாக தலையை ஆட்டினார்.

நாங்கள் தென்னிலங்கை அரசியலையும், சிங்கள மக்களின் வாழ்வியல் தொடர்பாக வும் அறிந்து கொள்கின்றோம். நீங்களும் அவ்வாறு, தமிழ் மக்களின் பிரச்சினை களை அறிந்துகொள்ள வேண்டும் என்று அந்த சிங்கள இளைஞரிடம் கூறினேன். சிங்கள ஊடகங்கள் குறிப்பாக சிங்களப் பத்திரிகைகள் தமிழ் மக்களின் இவ்வாறான பிரச்சினைகள் குறித்து எழுதுவதில்லை என்றார் அந்த சிங்கள இளைஞர்.

இவ்வாறு, சாதாரண சிங்கள மக்கள் மட்டுமல்ல படித்த சிங்களவர்கள் கூட தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை களை விளங்கிக் கொள்ளாதவர்களாகத் தான் இருக்கின்றனர். ஆனால், சிங்கள அரசியல்வாதிகளுக்குத் தெரியும். சிங்கள புத்திஜீவிகளுக்கு தெரியும். அவர்கள் அதனை சிங்கள மக்களுக்கு சொல்வ தில்லை. குறிப்பாக சிங்கள ஊடகங்கள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து எழுதுவதில்லை. பிட்டு, பீட்சா கதையையும் கூட இதன் வெளிப்பாடாகப் பார்க்கலாம்.

தெற்கில் வாழும் வறிய சிங்கள மக்களின் உணவில் பாணும், பருப்புக் கறியும் முக்கியமானது. பாண் விலை அதிகரிக் கின்ற போது அதிகம் கலைப்படுவோர் சாதாரண சிங்கள மக்கள் தான். அது போன்று ரொட்டியும் பலாக்காய் கறியும் பிரபலமானது. அதிகமான நடுத்தர நிலையிலுள்ள சிங்கள மக்கள் மூன்று வேளையும் சோற்றையே உணவாகக் கொள்கின்றனர். குறிப்பாக பகல், இரவு உணவு அவர்களுக்கு சோறாகவே இருக்கின்றது. அது அவர்களின் உணவுப் பழக்கம். அதனை யாரும் கொச்சைப் படுத்த முடியாது.

அதே போன்றுதான் வடக்கில் வாழும் மக்களின் உணவுப் பழக்கத்தில் பிட்டு முக்கிய இடத்தை வகிக்கின்றது. காலை வேளையில் பிட்டு சாப்பிட்டுவிட்டு வயலுக்கு செல்லும் விவசாயிக்கு கடினமாக வேலை செய்ய, இடையில் பசி வராமலிருக்க பிட்டு ஒரு தரமான உணவு. கடினமான உடல் உழைப்பில் ஈடுபடு கின்றவர்களுக்குத் தெரியும் பிட்டின் மகிமை. பிட்டும் மீன் குழம்பும் - பிட்டும் முட்டைப் பொரியலும்- பிட்டும், சம்பலும் வாழைப்பழம், அல்லது மாம்பழமும் இணையும்போது அதன் சுவை அலாதி யானது. பீட்சா அதற்கு இணையாகாது. அது மட்டுமன்றி, பீட்சா (pizza) என்பது ஓர் இத்தாலிய உணவு, ரொட்டியிலிருந்துதான் அது உருவானது.

ஓர் இனத்தின் அல்லது சமூகத்தினரின் உணவுப் பழக்கவழக்கங்களைக் கேலி செய்வது அவர்கள் மீதான புறக்கணிப்பை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது. ‘தோசை, வடை எங்களுக்கு வேண்டாம்’ (தோசே வடே அப்பிட்ட எப்பா) என்கின்ற கோசம் பல தசாப்தங்களுக்கு முன்னரேயே தென்னிலங்கையில் ஒலித்தது. அது தமிழரைப் புறக்கணிக்கும் விதமாகவே வெளிப்பட்டது என்பது தெரியாத விடயமல்ல.

இப்போது ஒரு பொலிஸ் அதிகாரியின் கருத்தாக வெளிவந்த ‘பிட்டும், பீசாவும்’ என்பதில் தமிழர் மீதான ஓர் எள்ளல் தொனி இருப்பதை மறுதலிக்க முடியாது. தமிழ் பிரதேசங்களில் பாதுகாப்புப் பணியாற்றும் பொலிஸார் தமிழ் மக்களின் நல்லுறவைப் பேணமல் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியாது. தமிழ் பிரதேசங்களில் பணியாற்றும் அவர்களுக்கு தமிழ் மக்கள் தொடர்பான புரிதல் மிக அவசியமாது.



இங்கு இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். கடந்த 29ஆம் திகதி கார்த்திகை விளக்கீடு பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டுள்ளது. அதனையும் அவர்கள் மாவீரர் தின நிகழ்வாகக் கருதினர். வடக்கின் பல பிரதேசங்களில் கார்த்திகை விளக்குகள் உடைத்தெறிக்கப்பட்டன. யாழ். பல்கலைக் கழக வளாகத்தினுள் உள்ள பரமேஸ்வரர் ஆலயம் முன்பாக கார்த்திகை தீபமேற்ற முற்பட்ட பல்கலைகழக மாணவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். விஞ்ஞான பீட மாணவர் ஒருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி வி. மணிவண்ணன், சட்டத்

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# தடைகளைக் கடந்த நினைவேந்தல்!




இவ்வருடம் பரபரப்பானதொரு சூழலில் தமிழ் மக்கள் இழந்த தங்கள் உறவுகளை நினைவு கூர்ந்துள்ளனர். வீடுகளில் விளக்கேற்றி அமைதியாக அவர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர். அந்த வகையில் நினைவேந்தலின் உணர்வு வெளிப்பாட்டில் எவ்வித குறையும் இல்லை என்றே கூற வேண்டும்.

இன்றைய கொரோனா பரவல் சூழ்நிலையில் இது பாதுகாப்பானது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனால், மாவீரர் துயிலுமில்லங்களில் கூடி அஞ்சலி செலுத்த முடியவில்லை என்கின்ற கவலை தேவையில்லை. காலச் சூழலிற்கு ஏற்றவாறு அனைத்து நடைமுறைகளின் வடிவங்களையும் மாற்றிக்கொள்வதில் தோல்வி இல்லை.

தற்போதைய கொரோனா பரவல் சூழ்நிலையில், திருமணங்கள், மரணச் சடங்குகள், கோவில் திருவிழாக்கள் என, மக்கள் ஒன்றுகூடும் அனைத்து நிகழ்வுகளும் சுகாதார அறிவுறுத்தல்களின் படி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கொரோனா தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை தங்கள் மத நடைமுறையின் படி அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று முஸ்லிம்கள் வாதாடி வரும் நிலையில் அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. இது தொடர்பில் ஐ.நாவின் கருத்தும் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் திட்டமிட்டே நடைமுறைப்படுத்தியது. தமிழ் பிரதேசங்களிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும் நீதிமன்றங்கள் ஊடாக தடை உத்தரவைப் பெற்றன. தமிழ் சட்டவாளர்கள் வாதாடியும் தடையை தகர்க்க இயலாமல் போனது.

பயங்கரவாதிகளை நினைவுகூர முடியாது என்கின்ற வாதத்துடன், கொரோனா பரவலை முன்னிறுத்தியும் தடை கோரப்பட்டது. விடுதலைப்புலிகளை தோற்கடித்த தரப்பினர் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால், அவர்கள் எவ்வகையிலும் இந்த நினைவேந்தலை தடைசெய்வர் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். கடந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தில் இவ்வாறான நினைவேந்தல்களை கண்டும் காணாத நடைமுறையொன்று பேணப்பட்டது. அதாவது அவர்கள் இதனை அனுமதிக்கவும் இல்லை, அதே வேளையில் தடைசெய்யவும் இல்லை.



ஐ.நா உள்ளிட்ட மனித உரிமைகள் அமைப்புகள் இறந்தோரை நினைவுகூர்வது அனைத்து மக்களுக்குமான உரிமை அதனை தடை செய்வது மனித உரிமை மீறல் என்று பல தடவை கருத்து வெளியிட்டு வந்துள்ளன. இதனை கருத்திலெடுக்காத விதத்திலேயே தற்போதுள்ள அரசாங்கம் நடந்துகொள்கின்றது.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்டனர். விடுதலைப்புலிகளை தோற்கடிக்கும் போரில் பல்லாயிரக் கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டமையும், நூற்றுக் கணக்கானோர் காணாமலாக்கப்பட்டமையும் உலகறிந்த விடயம். இதற்கு பொறுப்புக் கூறும் விடயத்தையே தற்போதைய அரசாங்கம் புறக்கணித்துள்ளது. ஆனால், போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளும், சந்திப்புக்களும், கைகுலுக்கல்களும், கைதிகள் பறிமாற்றங்களும் இடம்பெற்றே வந்துள்ளன.

அப்போது விடுதலைப்புலிகள் இந்தளவிற்குப் பயங்கரவாதிகளாக தெரியவில்லை. தோற்கடிக்கப்பட்ட பின்னரே பயங்கரவாதிகள் என்கின்ற முத்திரை அழுத்தமாகக் குத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, இறுதிப் போரில் கைது செய்யப்பட்ட மற்றும், சரணடைந்தோரில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் புனர்வாழ்வுச் சிறைகளில் அடைக்கப்பட்டு பின்னர் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டனர். அவ்வாறு அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு, சமூக வாழ்வில் இணைக்கப்பட்டமையை ராஜபக்ஸ அரசாங்கம் தங்களின் நல்லெண்ண நடவடிக்கையாக, மனிதாபிமான செயலாக அடிக்கடி குறிப்பிட்டு வருகின்றது. போராட்டத்தில் இறந்தவர்களை அவர்களின் உறவுகள் நினைவுகூர்வதையும் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக அனுமதிக்கலாம் அல்லவா?

மக்கள் இழந்த தங்கள் உறவுகளை நினைவுகூர்வதால் மீண்டும் ஆயுதப் போராட்ட உணர்வு எழுச்சி பெறும் என்று அரசாங்கத் தரப்பில் கூறுவது அபத்தமான சிந்தனையின் வெளிப்பாடேயாகும். நினைவேந்தல் நிகழ்வுகளை விடுதலைப் புலிகளை மீளுருவாக்க வழிவகுக்கும் நிகழ்வுகளாக சித்தரிப்பதும் அபத்தமானதே. இன்றைய உலக ஒழுங்கின்படி இலங்கையில் மீண்டும் ஓர் ஆயுதப் போட்டம் எழுச்சிகொள்வது சாத்தியமானதல்ல. இதனை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அரசாங்கம் இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

மரணித்த போராளிகளை மட்டுமல்லாது, போரில் இழந்த அனைத்து உறவுகளையும் நினைவுகூர்வது தமிழ் மக்களின் உணர்வு சார்ந்த விடயம் மட்டுமல்ல, உளவியல் சார்ந்த விடயமுமாகும். உதாரணத்திற்கு, வீடுகளில் கடவுள் வணக்கம் மேற்கொள்ளக் கூடிய வசதிகள் இருந்தாலும், கோவில்களில் ஒன்றுகூடி வணக்கம் செலுத்தும் வழக்கம் அனைத்து மக்களுக்கும் உள்ளது. அனைத்து மக்களும் ஓரிடத்தில் ஒன்றுகூடி சடங்குகளை மேற்கொள்வதென்பது ஓர் உளவியல் சார்ந்த விடயமே.

இவ்வாறுதான் மாவீரர் துயிலும் இல்லங்களும் பயன்படுத்தப்பட்டன. ஒரு காலத்தில் தங்கள் உறவுகளின் கல்லறைகளை அடையாளம் கண்டு கண்ணீர் விட்டு அஞ்சலி செலுத்திய மக்கள் போர் முடிவுற்றதன் பின்னர்- அந்தக் கல்லறைகள் யாவும் அடையாளம் தெரியாமல் சிதைத்தழிக்கப்பட்டதன் பின்னர் சிதைக்கப்பட்ட கற்களை ஓரிடத்தில் குவித்து அதனை ஒட்டுமொத்தப் போராளிகளின் கல்லறைகளாக எண்ணி அஞ்சலி செலுத்தும் நிலைமை ஏற்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் மாவீரர் துயிலுமில்லங்களுக்கே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. நினைவேந்தல் மேற்கொள்வதற்கான தடையை நீதி மன்றங்கள் ஊடாகப் பெற்றுக் கொண்ட பொலிஸார் இராணுவத்தினருடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அருகாமையிலும், அந்த வீதிகளிலும் அவர்கள் குவிந்திருந்தனர்.

அதுமட்டுமன்றி அந்நாளில் மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களை திறக்கும் நடவடிக்கைகளிலும் அவர்கள் இறங்கினர். வர்த்தகர்களுடன் வாக்குவாதங்களிலும் அவர்கள் ஈடுபட்டனர். குறிப்பிட்ட அந்நாளில் வர்த்தக நிலையங்களை மூடக் கூடாது என்று சட்டபூர்வமாக உத்தரவு எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆனால், இந்த சட்டத்தைப் பாதுகாப்பு தரப்பினரே கையிலெடுத்துக்கொண்டனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் தமிழ் மக்கள், போராடி மரணித்த தங்கள்

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



# திரை விமர்சனம் - பாரம்

## கண்ணன்

தமிழகத்தின் தென் பகுதிகளில் பெண் குழந்தைகளுக்கு கள்ளிப்பால் ஊற்றிக் கொலை செய்யும் குற்றம் இன்றளவும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற சில சம்பவங்கள் இதை உறுதிப்படுத்தின. அதேபோல முதுமையின் காரணமாக உடல் செயலற்றுக் கிடக்கும் முதியவர்களை தலைக்கூத்தல் எனும் முறைப்படி கொலை செய்கிற வழக்கமும் தமிழகத்தின் பல கிராமங்களில் உண்டு. கரிசல்காட்டு எழுத்தாளர் கி. ராஜநாராயணன் இது குறித்து நிறைய பதிவு செய்திருக்கிறார். இதனை அவர் பஞ்சுப்பால் கொடுத்தல் என்கிறார். தென் தமிழகத்தில் மட்டுமல்ல வடதமிழக பகுதிகளிலும் இந்த தலைக் கூத்தல் முறையில் முதியவர்களை கொலை செய்யும் வழக்கம் இருப்பதை, வெளி உலகுக்கு தெரியப்படுத்துகிறது, இந்த திரைப்படம்!

“பெருசு இழுத்துகிருக்கு மனசுல என்ன கிடக்கோ. மண்ணோ பொண்ணோ தெரியல” என ஒரு குரல் எழும்போது, “சரி அவர் வாழ்ந்த வீட்டு மண்ணக் கரச்சு கொஞ்சம் நாக்குல ஊத்துங்கப்பா” என இன்னொரு குரல் எழுவது சகஜம். இப்படியாக முதியவர்கள் வாழ்ந்த வீட்டு மண்ணை கரைத்து வாயில் ஊற்றுவது, அவர்கள் வேலை செய்த வயல் வெளி மண்ணை கரைத்து வாயில் ஊற்றுவது, நாணயத்தை மண் சட்டியில் தேய்த்து அந்த சிறு மணலை கரைத்து ஊற்றிக் கொல்வது. தங்கத்தை தரையில் தேய்த்து நாக்கில் வைப்பது என தலைக்கூத்தல் எனும் சடங்கு மூலம் பல வழிமுறைகளில் முதியவர்களை கொலை செய்து கொண்டிருக்கின்றனர். நேரடியாக ஊசி போட்டுக்கொல்வதும் உண்டு. இந்தக் கருவை மையமாக வைத்துதான் ‘பாரம்’ திரைக்கதை உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய ஒன்றிய அரசின் தேசிய விருதை பெற்றுள்ளது.

ஒரு கட்டிடத்தின் காவலாளியாக வேலை செய்யும் கருப்பசாமி எனும் கதாபாத்திரம் தான் கதையின் ஆன்மா. அந்தக் கருப்ப சாமியின் மூச்சு தலைக்கூத்தல் முறைப்படி நிறுத்தப்பட்ட சோகத்தைத்தான் பேசுகிறது ‘பாரம்’.

கருப்பசாமிக்கு தன் தங்கை, தங்கை மகன்கள் மீது கொள்ளைப் பிரியம். வேலை முடிந்த பிறகு தங்கை வீட்டுக்கு ஒரு எட்டு போகாமல் அவரது கால்கள் தன் வீட்டுக்குப் போவதில்லை. தங்கையின் மகன்களில் கடைசி மகன் வீரா என்றால் கருப்பசாமிக்கு கூடுதல் பிரியம். வீராவுக்கும் தாய் மாமன் என்றால் அத்தனை அன்பு. தொழிற்சங்கவாதியான வீரா ஊரில் இல்லாத சமயத்தில்தான் கருப்பசாமி தலைக்கூத்தல் முறையில் கொல்லப்படுகிறார். திரும்பி வரும் வீரா, தன் மாமா உண்மையில் விஷ ஊசி போட்டு கொல்லப்பட்டிருக்கிறார் என்பதை கண்டுபிடிக்கிறார்.

ஒருவிபத்தில் முதுகுத் தண்டில் காயம் ஏற்பட்டு படுத்தபடுக்கையாகிப் போகும் கருப்பசாமிக்கு செலவு செய்து வைத்தியம் பார்க்க மகன் செந்தில் விரும்பவில்லை.



அதனால், அவ்வூரில் மருத்துவ உதவியாளராக வேலை செய்யும் ஒரு பெண்ணை வைத்து கருப்பசாமி விஷ ஊசி போட்டு கொலை செய்கிறார். இதை வீரா வெளியே கொண்டுவந்தாலும் யாரும் அதிர்ச்சி அடையவில்லை!

விஷ ஊசி போட்டுக் கொலை செய்யப் பட்டுள்ளார் என தெரிந்தும் கருப்பசாமியின் உடல் மறுநாள் காலை எந்த சலனமும் இன்றி அனைத்து சாவு சடங்குகளும் நிறைவேற்றப்பட்டு அடக்கம் செய்யப்படுகிறது. வீரா, மாமா சாவுக்கு நீதி கேட்டு காவல் துறையினை நாடினாலும் அது பலன் தரவில்லை. ‘இது அவ்வளவு பெரிய குற்றம் இல்லை இதெல்லாம் கிராம வழக்கம்’ என்றளவில் முடிகிறது கதை.

தலைக்கூத்தல் தொடர்பாக வீரா கிராமத்தில் சிலரை சந்தித்துப் பேசுகிறார். அதில் ஒரு பெண், “நான் பலபேருக்கு தலைக் கூத்தியிருக்கேன் உடம்பு முடியாத ஆளுக வீட்ல இருந்தா அந்த வீட்டு ஆளுங்க என்னைய கூப்பிடுவாங்க. நான் எண்ணெய் சீயக்கா சேச்சு ஊத்தி நல்லா நாலு எளனிய சீவி குடிக்க குடுப்பேன் முடியாதவுக போய் சேர வேண்டிய இடத்துக்கு போய் சேந்திருவாக” என்கிறார். “இதுக்கு எவ்ளோ கூலி வாங்கிறீங்க?” என்ற வீராவின் கேள்விக்கு “அட காசு எல்லாம் வாங்க மாட்டேன். இத ஒரு புண்ணியத்துக்காக பண்றேன்.” என்கிறார்.

ஒருவர் இறந்த பிறகு நீர்மாலை எடுத்தல் என்ற வழக்கம் தமிழகத்தில் உண்டு. ஆண் இறந்தால் அவரது பங்காளிகளும், பெண் இறந்தால் அவரது கணவர் வீட்டாரும் இந்த நீர்மாலை எடுக்கும் சடங்கை செய்வர். இதன் பின்னணி தலைக்கூத்தல் சடங்குதான் என்றும் சொல்லப்படுகிறது. படுத்த படுக்கையில் உயிருடன் இருக்கும் முதியவர்களின் தலையில் குடம் குடமாக தண்ணீர் ஊற்றும்போது, மூச்சு திணறடித்து அவர் இறந்துபோவார். ஜன்னியினை உருவாக்கும் அளவில் அதிகமாக இளநீர் கொடுத்து அவர்களது உயிரை முடக்குவதும் பல இடங்களில் இருந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்று இயல்பாக இயற்கையாக இறந்து போகும் மனிதர்களின் சாவு சடங்குகளிலும் நீர்மாலை

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்
போல் இன்ஸ்லி
வட்டாரம் 24, ஸ்காபரோ - கில்வூட்
TORONTO
உதவி தயாராக உள்ளது
தொகுதியில் வாழ்வோருக்கான ரொறன்ரோ நகரசபை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை
- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை • நூலகம்
- கட்டிட அனுமதிப்பத்திரம் • குப்பை அகற்றல்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம் • நகரசபைத் தேர்தல்
- அவசரகால வதிவிட வசதிகள் • தீயணைப்பு சேவை
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்
- “ஒன்ராரியோ வேலைகள்” நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள் • பொதுப் போக்குவரத்து
- நகர்காவலர் சேவை • மரங்கள்
- பொதுச் சுகாதார சேவை • குடிநீர்
- தெருக்கள் • ஆதன வரி
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி

எமது சமூக தொடர்பு சாதனங்களுடும், வலையத் தளமும் தினமும் பதிவேற்றம் செய்யப்படுவதால், தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள பின்வரும் தகவல் சாதனங்களைப் பாவிக்கவும்.
Twitter: @Ainslie_Ward24 Instagram: @cllrainslie
Facebook: @ward24scarboroughguildwood

பொது சுகாதார சேவை அலுவலகத்தின் தகவல் தொலைபேசி இலக்கமும் 311 என்ற இலக்கமும் அதி கூடிய அழைப்புக்களை ஏற்றுக்கொள்வதால், ரொறொன்ரோ மாநகரசபையின் www.toronto.ca/covid19 என்ற வலையத் தளத்தில் 53 மொழிகளில் உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

CONSTITUENCY OFFICE
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

TORONTO CITY HALL OFFICE
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com 416-396-7222

# வேண்டாத கனவுகள்




'Crime' நாவல்களில் வருவதுபோல் கும்மிருட்டு; எங்கோ தூரத்தில் நாய் குலைப்பது கேட்கிறது. அவன் தனியாக அந்த ஒத்தையடிப் பாதையில் நடந்து வந்து கொண்டிருக்கிறான். பின்னாலிருந்து என்னவோ சரசரவென சத்தம், யாரோ வேகவேகமாக அவனை தொடர்ந்து வருவதுபோல் தெரிகிறது. பதற்றமும் பரபரப்புமாக அவன் எட்டி நடைபோட, சட்டென்று இடியும் மின்னலுமாகப் பெரும் மழை தொற்றிக் கொள்கிறது. அவன் இன்னும் வேகமாக நடக்க முயல இரண்டு முரட்டுக் கைகள் அவனை இறுக்கமாக நெருக்கிப் பிடிக்கிறது.

அவன் 'ஆ' வென்ற சத்தத்தோடு ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்து உட்காருகிறான். இன்னும் அவன் உடல் நடுங்கிக் கொண்டிருக்கிறது. குளிரூட்டப்பட்ட அந்த சொகுசான அறையிலும் அவனுக்கு வேர்த்து கொட்டுகிறது. வெடவெடக்கும் கைகளோடு, அருகிலிருக்கும் தண்ணீரை வேகவேகமாகக் குடித்து கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்திய பின்புதான், இதுவரை அவன் கண்டது கனவு என்றே உடல் உணர்ந்து, மனம் மெல்ல நிதானப்படுகிறது.

(என்ன நடக்கிறது இங்கே. திகில் கதையை தவறுதலாக இந்தப் பக்கத்தில் பிரசுரித்து விட்டார்களோ என நீங்கள் மேலே யோசிக்கு முன் உங்களிடம் ஒரு கேள்வி?]

நீங்கள் கனவு கண்டிருக்கிறீர்களா? நான் கேட்பது அறிஞர் அப்துல் கலாம் சொன்னதுபோல உங்களை தூங்க விடாமல் செய்யும் கனவல்ல. தூக்கத்தில் வரும் கனவு.

நிச்சயம் இனிமையான கனவுகளும் கடுமையான கனவுகளும் வெவ்வேறு தருணங்களில் கண்டிருப்பீர்கள். அந்த நேரங்களில் உங்கள் மன நிலை மற்றும் உடலின் செயல்பாடு எப்படி இருந்தது என்று சற்றே யோசித்துப் பாருங்கள். நல்ல கனவுகள் காணும் போது மனமெங்கும் மகிழ்ச்சி பொங்க உடல் இலகுவாக முகம் மலர்ந்து எழுந்திருந்திருப்பீர்கள். அதேநேரம் கண்டது ஓர் எதிர்மறையான கனவாக இருந்திருந்தால்



மனம் பதற உடல் வியர்க்க பாதி தூக்கத்தில் திடுக்கிட்டு மேலே பார்த்த நம் கதைநாயகன் எழுந்தது போலப் பதறி எழுந்திருந்திருப்பீர்கள்.

ஏன் எதற்கென்றே தெரியாமல் வரும் இந்தக் கனவுகள் அந்த நேரங்களில் உண்மையில் நடப்பது போன்ற உணர்வைத் தரும். உடல் சிலிர்த்துத் துடிக்கும். இதற்கு என்ன காரணம் என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா?!

நம்முடைய ஆழ்மனது மிக ஆற்றல் வாய்ந்தது. உடலுக்குள் ஊடுருவும் இரத்த ஓட்டத்திலிருந்து நம்முடைய நடை உடை பாவனை என 95 சதவீதம் நம்முடைய செய்கைகள் நம் ஆழ்மனதையே சார்ந்துள்ளது. இப்படி A-Z நீங்கள் யார் என்பதை நிர்ணயிக்கும், நீங்கள் விரும்புவதை உங்களை அடையச் செய்யும், சகல ஆற்றல் மிக்க இந்த எல்லாம் தெரிந்த ஆழ்மனதால் ஒன்று மட்டும் செய்ய முடியாது. அது என்னவென்றால், தனக்குள் எழும் எண்ணங்களில் எது உண்மை எது பொய் என்று பகுத்தறிய முடியாது.

ஆழ்ந்த உறக்கத்தில் வரும் கனவுகளாகட்டும் அல்லது நிஜ வாழ்வின் நிகழ்ச்சிகளாகட்டும் எல்லாமே ஆழ்மனதிற்கு ஒன்றுதான். கெட்ட கனவுகள் வரும்போது, அந்தக் கனவுகளை கனவென்று உணராமல் உண்மை என்றே ஆழ்மனம் நம்புகிறது. அதனால்தான் கனவின் தாக்கத்திற்கேற்ப உடலில் அது பதற்றத்தையும் படபடப்பையும் ஏற்படுத்துகிறது. பின் நீங்கள் விழித்துச் சில நிமிடங்கள் சென்று இது கனவுதான் என்று உங்கள் அறிவு விழிப்புணர்ச்சி தந்தவுடன் தான் இது கனவு என்று மனம் ஏற்றுக் கொண்டு உடல் அமைதி அடைகிறது.

உதாரணமாக, மேலே பார்த்ததுபோல், தான் இருட்டில் தன்னந்தனியே நடப்பது போலவும், தன்னை யாரோ பின் தொடர்ந்து பிடிப்பது போலவும், திகில் கனவு கண்ட நம் கதை நாயகனுக்கு உண்மையில் எதுவுமே நடக்கவில்லை. அவர் நல்ல சூழலில் தன்னுடைய வீட்டில் பாதுக்காப்பாக உறங்கிக் கொண்டிருக்கிறார். அது வெறும் தீய கனவு. அவர் எண்ணங்களில் அவரையுமறியாமல் ஏற்பட்ட ஒரு நிகழ்வு. ஆனால் அவர் உடல் அது உண்மையில் ஏற்பட்டது போல் நடுங்கியது. நெஞ்சு துடித்து உடல் வியர்த்து விறு விறுத்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் மட்டுமல்ல நீங்கள் விழித்திருக்கும் போதும் கூட உங்களுக்குள் எழும் எண்ணங்களை அப்படியே உண்மை என நம்பும் ஆழ்மனம் அதற்கான விளைவுகளை உங்கள் உடலில் ஏற்படுத்துகிறது. எப்படி ஒரு கனவை நீங்கள் விழிப்புணர்வோடு அது வெறும் கனவுதான் என நினைக்கும்போது உங்கள் உடலும் மனமும் நிதானத்திற்கு வருகிறதோ, அதுபோல்தான் உங்கள் மனதில் எழும் வேண்டாத எதிர்மறை எண்ணங்களையும், நீங்கள் கொஞ்சம் விழிப்புணர்வோடு கையாண்டால், உடல் அதிலிருந்து மீண்டு நிதானப்பட்டு விடும். அப்படி இல்லாமல் அந்த எதிர்மறை எண்ணங்களுக்குள் மூழ்கும்போது மனம் மகிழ்ச்சியற்றுத் தவிக்கிறது.

நீங்கள் கடலோரம் நடந்து செல்லும்போது அங்கு சிப்பியும் கிடக்கிறது முத்தும் கிடக்கிறது காய்ந்த பாசியும் கிடக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் எதை உங்களுக்காக எடுத்துச் செல்வீர்கள்? உங்கள் முன் கிடப்பது எதுவாக இருந்தாலும் அதில் நீங்கள் எதை தேர்ந்தெடுக்கிறீர்களோ அதுவே நீங்கள் யாரென்பதை நிர்ணயிக்கிறது. பெரும்பாலும் இதில் எல்லோரும் முத்தை தான் தேர்ந்தெடுப்பர் இல்லையா?

அதுபோல்தான் உங்கள் மனதில் நீங்கள் எடுத்து இருத்திக்கொள்ள வேண்டிய நிகழ்வுகளும் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும். சில நேரம் வேண்டாத பொருள்களை உங்களுடன் எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால், ஒன்று அதை தூர ஒதுக்கி விடுவீர்கள் அல்லது அதை உங்களுக்கு வேண்டிய வகையில் மாற்றுவீர்கள் அல்லவா?. அதுபோல் உங்களுக்குள் சுழலும் எண்ணங்களையும் உங்களுக்குப் பயனுள்ள முறையில் சீர் செய்யுங்கள். உங்கள் வாழ்க்கையும் சீராக மகிழ்ச்சியாக இருக்கும்.

நீங்கள் பலமுறை பார்த்திருப்பீர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றிப் படித்தவுடன் தன்னை சுற்றியும் அதுபோல் நடப்பதுபோல் உணர்வுகள் எழும். 'nocebo effect' என சொல்லப்படும் இந்த முறை உண்மையில் இல்லாத பிரச்சினையையும், உங்கள் கவனத்தில் அந்த எண்ணம் இருப்பதைக் கொண்டு உங்களுக்கே அது இருப்பதுபோல் நம்பச் செய்து மனதை அழுத்தும். மனதின் இந்த இயல்பை புரிந்துகொண்டு, பிரச்சினையைப்பற்றி சிந்திப்பதற்குப் பதில் தீர்வைப் பற்றி சிந்தித்தால், எந்தப் பிரச்சினையும் தாக்காமல் மகிழ்ச்சியாக வாழலாம் என்கின்றன ஆய்வுகள்.

எந்த ஒன்றுமே உங்களுடைய நம்பிக்கையை சார்ந்தே உள்ளது. அந்த நம்பிக்கை உங்கள் ஆழ்மனதை சார்ந்துள்ளது. அந்த ஆழ்மனதிற்குள் முடிந்தவரை நல்ல விடயங்களை புகுத்துங்கள். உங்களை சுற்றியும் நல்ல சூழலை அமைத்துக் கொள்ளுங்கள். எதிர்மறையான விடயங்களை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது. இன்றைய பரபரப்பான சூழலில் அது முற்றிலும் சாத்தியமில்லை என்றாலும் அவை உங்கள் ஆழ்மனதை பாதிக்க விடாமல் தற்காத்துக் கொள்வது உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

நீங்கள் எவ்வளவு மெத்தென்ற சிவப்பு கம்பளத்தில் நடந்தாலும் உங்கள் கால்களில் முட்செருப்பு அணிந்திருந்தால் உங்கள் பயணம் வேதனையும் வலியும் மிக்கதாகத்தான் இருக்கும். இதுவே நீங்கள் எத்தகைய முட்புதரில் நடந்தாலும் உங்கள் கால்களில் உறுதியான மிருதுவான நல்ல செருப்பு அணிந்திருந்தீர்களானால் உங்கள் பயணம் உறுத்தல் இல்லாத வலி இல்லாத இனிமையான பயணமாக இருக்கும்.

அதுபோல் எந்த சூழலிலும் உங்களை நீங்கள் திடமாக வைத்துக் கொள்ளுங்கள். எந்தவொரு எதிர்மறை நிகழ்வையும் கடக்கும்போது அதை பயமாக, ஓர் உணர்வுபூர்வமான பிரச்சினையாக மட்டும் மனதில் எடுக்காமல், அதனை தர்க்க ரீதியிலான கோணத்திலும் பார்த்து, பிரச்சினைக்கான தீர்வையும் சேர்த்து யோசியுங்கள். இது எந்தவொரு எதிர்மறையான எண்ணங்களையும் நேர்மறையாக மாற்றி விடும்.

இப்படி எந்தப் பிரச்சினையிலும் அதற்கான தீர்வுகளை அலசாமல் எனக்கு எதுவும் சரியாக நடப்பது இல்லை என்றே நீங்கள் சொல்லக் கூடியவராக இருந்தால், நீங்கள் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும், எதெல்லாம் சரியாக இல்லை என்று சொல்வதற்காக அந்த மாதிரியான விடயங்களையே மனம் தேடிப் பிடிப்பது மட்டுமல்லாமல் அதை மற்றவர்களிடம் சொல்லிக் காட்டுவதற்காக மனதில் பாதுகாப்பாக சேர்த்தும் வைத்துக் கொள்ளும். உங்கள் மனதில் அந்த எதிர்மறையான எண்ணங்களை நீங்கள் எடுத்துக் கொள்ளும் அதேநேரம் உங்கள் மூளையின் பகுதியில் இருக்கும் சுரப்பிகள் தங்கள் வேலையை செய்யத் தொடங்கி அதன் தாக்கத்தை உடலில் ஏற்படுத்தி விடும்.

உண்மையில் உங்களுடைய எண்ணங்களே உங்களை உருவாக்குகின்றன. ஒரு நாளைக்கு 60,000 எண்ணங்கள் சராசரியாக ஒருவர் மனதில் எழுகிறது. இதில் பெரும்பாலும் ஒரே மாதிரியான எண்ணங்களே திரும்பத் திரும்ப சுழன்று வரும். அந்த எண்ணங்களை கொஞ்சம் கவனத்தோடு கையாளும்போது ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் வாழ்வை நிறைக்கும்.

விளம்பரம்
VLAMBARAM™
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# திரை விமர்சனம்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

எடுத்தல் இளநீர் ஊற்றுதல் என்ற வழக்கம் அப்படியே தங்கியிருக்கிறது என்றும் சில ஆய்வாளர்கள்



தெரிவிக்கின்றனர்.

'பாரம்' இயக்குநர் ப்ரியா கிருஷ்ணசாமி தமிழில் மாற்று சினிமா தளத்தை கையாள்வதில் ஆர்வமும் திறமையும் கொண்டவர். இவர் இயக்கத்தில் இந்தி மற்றும் மராத்தி மொழியில் வெளியான 'கங்கோபாய்', 'பெர்சி' ஆகிய படங்கள் முக்கியமானவை. அந்த வரிசையில் 'பாரம்' திரைப்படமும் சேர்கிறது.

ஜெயந்த் சேது மாதவனின் ஒளிப்பதிவில் இருக்கும் எதார்த்தம் இத்திரைப்படத்தின் பலம். ஜெயந்த் சேது மாதவன் பார்வையாளனின் கரங்களை இறுக பற்றி தனது ஒளிப்பதிவின் மூலம் நம்மை அந்த கிராமத்திற்குள் அழைத்துச் செல்கிறார். பார்வையாளன் ஒரு கொலைக் களத்திற்குள் அச்சமின்றி பயணிக்க அவரது ஒளிப்பதிவு உதவியிருக்கிறது.

கருப்பசாமியாக நடித்திருப்பவர் 'புதுச்சேரி பல்கலைக்கழகத்தின்' நாடகத் துறை தலைவர் ராஜு. இவர் தலைமையில் அத்துறையில் பயிற்சி பெற்ற கலைஞர்கள் மட்டுமே இப்படத்தின் அனைத்து கதாபாத்திரங்களிலும் நடித்துள்ளனர். இப்படம் இயல்பாக அமைய இதுவும் ஒரு முக்கியக் காரணம்.

திரைப்பட இயக்குநர் வெற்றிமாறன் இப்படத்தை வெளியிட்டார். இதனால், நல்ல விமர்சனமும் வரவேற்பும் கிடைத்த போதும் வசூல் ரீதியாக மாற்று சினிமாக்கள் சந்திக்கும் அதே பிரச்சினையைத் தான் பாரமும் சந்தித்தது. என்றாலும் தமிழ் சினிமா இனி முன்னெடுத்துப்



பயணிக்க வேண்டிய பாதையினை தீர்மானிக்கும் படைப்புகளில் பாரமும் ஒன்று. நம்பிக்கை தரும் இந்தப் படைப்பு தற்போது அமேசான் ப்ரைமில் கிடைக்கிறது.

# தடைகள்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி



உறவுகளை - மாவீரர்களாகத் தங்கள் மனங்களில் பதிந்து விட்ட அந்தப் போராளிகளை தங்கள் தங்கள் வீடுகளிலேயே விளக்கேற்றி அஞ்சலி செய்தனர். இந்த உரிமையினையும் இல்லாமல் செய்யும் நடவடிக்கைகள் இனிவரும் காலத்தில் மேற்கொள்ளப்படலாம். இதற்காக மக்கள் ஜனநாயக வழிகளில் போராட வேண்டியும் வரலாம்.

ஆனால், மக்களின் ஜனநாயக வழிமுறைகளை- மக்களால் மேற்கொள்ளப்படும் உணர்வு சார்ந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் தடை செய்துகொண்டிருக்க முடியாது.

# தடைகள்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

தரணி வி. திருக்குமரன் ஆகியோர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கார்த்திகை தீபமேற்றுவது இந்துக்களின் அடிப்படை உரிமை என பொலிஸாருக்கு எடுத்துக் கூறியபோது, மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முற்படுவதாகத் தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தாங்கள் மாணவனை கைது செய்ததாகக் கூறியதோடு பின்னர் மாணவன் விடுவிக்கப்பட்டார்.

மக்களின் வழிபாட்டு உரிமை, சமய சார்ந்த சடங்குகள், அவர்களின் பாரம்பரிய உணவு பழக்கங்கள் குறித்த புரிதல்கள் குறிப்பாக பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் தரப்பினருக்கு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சிறு



முரண்பாடுகள் கூட இன, சமூக முரண்பாடுகளாகவே விரிவடையும்.

## ஏன் பயப்படவேண்டும்?

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
**www.timelesstoday.com**

## Why Fear?


திரு. பிரேம் ராவத் அவர்களின் Lockdown தொடர்கள் உரையிலிருந்து ஒருசில பகுதிகள்...

நான் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற கேள்விகளைப் படிக்கும்போது பலர் இன்றும் இந்த வைரஸை (COVID-19) பற்றிப் பயப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என உணர்கின்றேன். நான் உங்களுக்குக் கூற விரும்புவது என்னவென்றால், பயப்படுவதால் எந்தவொரு தீர்வும் கிடைக்கப் போவதில்லை. நீங்கள் கவலைப்படும் போது உங்களது உடலானது பலவீனம் அடையத் தொடங்கும். இதனால் மேலும் மேலும் வைரஸின் தாக்கம் அதிகமாகும். ஆகையால் நீங்கள் உங்களினுள்ளே ஆனந்தமாக இருக்க வேண்டும். உங்களின் உள்ளே உள்ள ஆனந்தம் எங்கிருந்து வருகின்றது? இந்த சூழ்நிலையில் மனிதன் எவ்வாறு ஆனந்தமாக இருக்க முடியும்? இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், இந்தப் பதட்டமான சூழ்நிலை வெளியேதான் உள்ளது. உங்கள் உள்ளே அல்ல. உங்களுக்கு இந்த வியாதி வந்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அது உங்கள் மனதில் (இரு காதுகளுக்கு இடையில்) தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உங்கள் காதுகளை மூடுவதினால் வெளியே ஏற்படும் சத்தங்களை நீங்கள் இலகுவாக நிறுத்தி விடலாம். ஆனால் மனதில் ஏற்படும் சத்தங்களை (குழப்பங்களை) எவ்வாறு நிறுத்த முடியும்? இதுதான் மிகவும் சிக்கலான விடயமாக உள்ளது. உங்களின் உள்ளே என்னென்ன சக்திகள் உள்ளன? எந்த சக்திகளை நீங்கள் பாவிக்க முடியும். உங்களிடம் என்னென்ன வல்லமை உள்ளது? உங்களிடம் சகிப்புத் தன்மை உள்ளது. பொறுமை உள்ளது. தெளிவு உள்ளது. எல்லாவற்றையும் தெளிவாக அறிந்து கொள்ளும் (Knowing) வல்லமை உள்ளது. நம்புவது அல்ல (Not Believing), அறிந்து கொள்ளும் வல்லமை உள்ளது. உங்களின் உள்ளே எல்லாப் படைப்புக்களையும் உருவாக்கிய சக்தியும் உண்டு. இதன் அர்த்தம் என்னவெனில் எதுவெல்லாம் உங்களுக்குத் தேவையோ, அவை அனைத்தும் உங்களிடம் குறைவின்றிக் காணப்படுகின்றது. நீங்கள் எவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் இருந்தாலும் இவற்றைப் பாவித்துக்கொள்ள முடியும். கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு என்ன கூறுகின்றார்? நான் உங்களுக்கு கூறுகின்றேன். "நீ போர் புரி. அதேசமயம் என்னையும் நினைவில் கொள்" எனக் கூறுகின்றார். அதாவது, என்னை உன் உள்ளத்தில் நிலைநிறுத்தி, தியானித்து சமர் செய் என உரைக்கின்றார். நாம் இங்கு புரிந்துகொள்ளவேண்டிய விடயம் யாதெனில் வெளியே என்னதான் நடைபெற்றுக் கொண்டிருந்த போதும், உங்களின் உள்ளேயும் ஏதோ ஒன்று நடைபெற்றுக்கொண்டேதான் இருக்கின்றது. நீங்கள் அதனைப் புரிந்து கொண்டு தியானிப்பது மிகவும் அத்தியாவசியமாகின்றது. இங்கு பகவான் கூறுகின்றார் "நான் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கின்றேன், என்னை நினைப்பவரிடமும், தியானிப்பவரிடமும் என்றும் நிலைபெற்றிருக்கின்றேன்". எவ்வாறு நாம் இறைவனை நினைப்பது? நாம் இங்கு ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் கடவுளின் திருவுருவங்களைப் பார்த்திருக்கின்றோம். சித்திரக் கலைஞன் தன் மனதில் தோன்றியதை, தான் பல நூல்களினூடாகக் கேட்டறிந்த விடயங்களை துணைகொண்டு படங்களாக வரைந்தான். அவன் கடவுளுக்கு இரண்டு கண்கள், மூக்கு, தலைமுடியென பலவற்றைக் கொடுத்தான். மனிதனைப் போலவே உருவமும் கொடுத்தான். அதனால் மக்கள் இறைவனைத் தியானம் செய்யும்பொழுதும் படங்களை,சிலைகளை, உருவங்களை பார்க்கும்பொழுதும் அவை கடவுளின் வடிவம் என எண்ணுகின்றனர். ஆனால் யார் ஒருவர் 'காலத்திற்கு' முன்பே இருந்தாரோ, இப்பொழுதும் இருக்கின்றாரோ, எப்பொழுதுமே இருப்பாரோ, மனிதர் தோன்ற முன்பும் அவர் இருந்திருக்கின்றார். இன்று மனிதன் இருக்கின்றான் அவரும் (இறைசக்தி) இருக்கின்றார்.

அவ்வாறாயின் அவரது வடிவம்தான் என்ன? அவருக்கு ஓர் உருவம் ஏன் தேவை? நமக்கு கண்கள், மூக்கு, வாய், காது தேவையாகவுள்ளது. கண்களினால் பார்க்கின்றோம். மூக்கினால் சுவாசிக்கின்றோம், நுகர்கின்றோம். வாயினால் பேசுகின்றோம், உணவு உட்கொள்கின்றோம். காதுகளால் கேட்கின்றோம். ஆனால் எங்குமே நிறைந்திருப்பவருக்கு, கேட்டாலும் கேட்காவிட்டாலும் அது பொருட்டல்ல. அது நமக்குத்தான் முக்கியம். இங்கு சிந்திக்கவேண்டிய விடயம் நாம் நம்மைப் போல் கடவுளை உருவாக்குகிறோமா? அல்லது கடவுளின் உண்மையான சொரூபத்தை ஏற்றுக்கொள்கிறோமா? என்பதுதான். கடவுளின் உண்மையான சொரூபத்தை ஏற்றுக்கொள்ளவிரும்பினால் அதனை நம்முள்ளே நாம் உணர வேண்டும். நமது கற்பனையாலோ, எண்ணங்களினாலோ அல்ல. எம்முள்ளே தோன்றிய எண்ணங்களினாலும், கற்பனைகளினாலும், நாம் உருவாக்கிய படங்களினாலும் அவர் (இறைவன்) அடைக்கப்பட்டுவிட்டார். இவ்வாறு அவர் அடைக்கப்பட்டு இருப்பதற்கான அவசியம்தான் என்ன? நான் பல தடவை கூறியிருக்கின்றேன். உண்மையான கடவுள் இங்கிருந்து அங்கோ அல்லது அங்கிருந்து இங்கோ செல்லமுடியாது. ஏனெனில் அவர் எல்லாவிடத்திலும் உள்ளார். இதுதான் எல்லாவற்றிலும் மிகப்பெரிய விடயமாகும்.

இங்கு நான் ஒரு சிறிய கதையை உங்களுக்குக் கூறவிரும்புகின்றேன். ஒரு தடவை அக்பரின் (அரசன்) தர்பாரிலிருந்த கவிஞர் ஒருவர் அக்பரை புகழ்ந்து பல அழகான கவிதைகள் எழுதியிருந்தார். சபையோரின் கைதட்டல் மற்றும் அரசனின் பாராட்டுதலால் பரவசப்பட்ட கவிஞர் மேலும் தனது கவிதைகளை தொடர்ந்து சொல்லிக் கொண்டே சென்று இறுதியில் "அரசனே நீங்கள் கடவுளைவிட

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)


TRIDEL
BUILT FOR LIFE
WESTERLY
NEW PROJECT BY TRIDEL
(DUNDAS/ISLINGTON)
Storeys 20
Units 257
Sizes from 502SF to 1120SF
Walk to Islington subway
Get VIP Platinum Access to the Best Units and the Best Pricing
416.321.6969
HomeLife / GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated


நம்மை நாமே
காத்துக் கொள்வோம்!
முழங்கையால்
மறைத்து
இருமலாம்
உங்கள்
கைகளைக்
கழுவுங்கள்
2 m
எப்போதும் 2மீ
இடைவெளிவிடுங்கள்
அனைத்து வகையான
பொது போக்குவரத்திலும்,
மூடப்பட்ட அல்லது ஓரளவு
மூடப்பட்ட பொது இடங்களில்
10 வயது அல்லது அதற்கு
மேற்பட்ட அனைவருக்கும்
இந்த வழிமுறைகள்
பின்பற்றப்பட வேண்டியது
கட்டாயமாகும்.
உங்கள் முகத்தை
மறைக்கவும்
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre
gouvernement
Québec

# ஏன் பயப்பட ...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

உயர்ந்தவர்” எனக் கூறிவிட்டார். இதைக் கேட்டதும் சபையோரும், அரசனும் இதை எவ்வாறு ஏற்றுக்கொள்ளமுடியும் என்ற குழப்பத்தில் ஆழ்ந்து விட்டனர். அரசன் தனது ஆஸ்தான மந்திரியான பீர்பாலை நோக்கி “நான் உண்மையில் கடவுளைவிட பெரியவரா?” என வினாவினார். குழப்ப மடைந்த பீர்பாலும் அரசனே ஓரிரு தினங்கள் அவகாசம் தாருங்கள், தகுந்த பதிலளிக்கின்றேன் என்றார். பீர்பாலுக்கு “நீங்கள் கடவுளைவிட உயர்ந்தவர்” என்று அரசனிடம் கூறினால் நிச்சயமாக தகுந்த தண்டனை தனக்கு கிடைக்கும் என நன்றாகவே தெரிந்திருந்தமையால், என்ன தான் செய்வது என யோசிக்கலானார். திடீரென பீர்பாலுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. மறுநாள் அக்பரின் தர்பாருக்கு மிகவும் சந்தோஷமாக வந்த பீர்பால் “மகாராஜா, நீங்கள் கடவுளைவிட பெரியவரா அல்லது சிறியவரா என்பதல்ல விடயம். கடவுளாலே செய்யமுடியாத ஒரு விடயத்தை உங்களால் செய்யமுடியும்” என்றார். அப்பொழுது அக்பர் “பீர்பால், அது என்ன விடயம்?” எனக் கேட்டார். அதற்கு பீர்பால் “மகாராஜா, நீங்கள் நினைத்த மாத்திரத்தில் எந்தவொரு மக்களை வேண்டுமென்றாலும் உங்களது நாட்டைவிட்டு வெளியேற்ற முடியும். ஆனால் இந்தப் பிரபஞ்சத்தையே பராமரிப்பவர், எவ்வாறு யாரையேனும் ஒருவரை தனது இராஜியத்தைவிட்டு வெளியே அனுப்பமுடியும்? எங்கே அனுப்புவார்? அவர் இல்லாத இடம் எங்கேயுள்ளது?” என்றார். மிகவும் புத்திசாலித்தனமாக பீர்பால் பதிலளிப்பதை யிட்டு அக்பர் மகிழ்ச்சியடைந்தார். நான் இந்தக் கதையை நினைக்கும்போது உண்மையிலேயே கடவுள் இல்லாத இடம், பொருள் என்று என்ன உள்ளது எனத் தோன்றுகின்றது. ஆகையால் அந்தப் பிரபஞ்ச சக்தி என்னுள்ளே உள்ள பொழுது நான் ஏன் பயப்படவேண்டும்?

இப்பொழுது இந்தக் கொரோனா வைரஸ் (COVID–19) தொற்று உலகம் முழுவதிலும் பரவிக்கொண்டிருக்கையில் எல்லோருக்கும் “என்ன நடக்கும்?” என்ற பயம் உள்ளது. எல்லாம் நன்றாக நடக்கும். நீங்கள் கவலைப்படாதீர்கள். விஞ்ஞானிகள், இதற்கு தீர்வு காண்பதற்கு மிகவும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கான தடுப்பூசி (Vaccine) கண்டு பிடிக்கப்பட்டதும் Lockdown இலிருந்து மக்கள் வெளியே செல்ல முடியும். எது வேண்டுமானாலும் செய்து கொள்ள முடியும். ஒருவர் நோய்வாய்ப்பட்டாலும் பெரியதொரு தாக்கத்தை அது ஏற்படுத்த மாட்டாது. வைத்தியர்கள் இதற்கான மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்காக மிகவும் முயற்சி செய்கின்றனர். இங்கு நீங்கள் கடைப்பிடிக்கவேண்டிய மிகப் பெரிய விடயம் என்னவென்றால் உங்களை முடியுமானவரை தனிமைப் படுத்திக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் அனைவருக்கும் உதவமுடியும்.

மனிதன் தன்னைத்தானே அறிந்து கொள்ளும் பொழுது மட்டுமே அவன் உண்மையான ஆனந்தத்தை உணர முடியும். “உடலின் உள்ளே மிகவும் அழகான ஒரு பூந்தோட்டம் உள்ளது. நீர் ஊற்றுக்கள் உள்ளன. வைரங்கள், முத்துக்கள் எல்லாமே உள்ளன. மக்கள் உள்நோக்கித் திரும்பி இவற்றை புரிந்து கொள்ள வேண்டியது மட்டுமே குறை யாகவுள்ளது. என்னிடம் ஒரு நபர் கேள்வி யொன்று கேட்டிருந்தார். தனது நண்பர்கள் பலர் புதிய புதிய தொழில்நுட்பக் கருவிகளை வைத்திருக்கின்றனர். தனக்கும் அக்கருவிகளின் தேவை இருப்பதனால் தன் பெற்றோரிடம் சில கருவிகளை வாங்கித் தரும்படி கேட்டிருந்தேன். அதற்கு என் பெற்றோர்களோ நீங்கள் படித்து பின் உழைத்து இவையெல்லா வற்றையும் வாங்கி பாவிக்கமுடியும் என்று கூறினர். அந்த நபர் இதுபற்றிய என்னுடைய கருத்தைக் கேட்டிருந்தார். நான் உங்களுக்கு சொல்வதெல்லாம் உங்கள் தாய், தந்தையர் மிகவும் சரி யாகத்தான் சொல்லியிருக்கின்றனர். உங்களுக்கு மற்றவர்கள் மேல் பொறாமை இருக்கக் கூடாது. எந்தவொரு உழைப்பு மின்றி கிடைக்கின்ற பொருட்களால் ஏற்படும் பின் விளைவுகளை அவர்கள் ஒருநாள் அனுபவிக்க வேண்டியிருக்கும். அதனால் ஏற்படும் விளைவுகள் நிச்சய மாக நன்றாக இருக்க மாட்டாது. உழைப் பின்றிக் கிடைக்கும் பொருட்களை மனிதன் ஒருபொழுதும் மதிக்கப்போவதில்லை. அதனைப் பற்றி சரியான முறையில் சிந்திக்கவே முடியாது. சில பெற்றோர்கள் மீண்டும் மீண்டும் தங்களது பிள்ளை களுக்கு எல்லாவற்றையும் கொடுத்துப் பழக்கப்படுத்தி விட்டனர். அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் தவறான காரியங்களையே செய்யத் தொடங்கி விடுவர். அதன் பிறகுதான் அப்பெற்றோர் கள் தங்கள் தவறுகளை உணரத் தொடங்குவர். நான் இதைப் பல சிறைச்சாலைகளுக்கு சென்றிருந்தபோது அறிந்துள்ளேன். அங்கே உள்ள பலருக்கு எல்லாமே இலகுவாகக் கிடைத்தபொழுது, வேலை செய்வதற்கான தேவையிருக்க வில்லை, அதைப்பற்றி அவர்களால் சிந்திக்க முடியவில்லை. பொருட்களுக்கு ஒரு மதிப்பும் அவர்கள் கொடுத்திருக்க வில்லை. இதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத் திற்குத் தள்ளப்பட்டிருந்தனர். ஆகையால் உங்களது தாய், தந்தையரின் பேச்சைக் கேளுங்கள். உங்களுக்கு விருப்பமான தொழில்நுட்பக் கருவிகளை உங்கள் உழைப்பில் வாங்குங்கள். மகிழ்ச்சியும் பெருமிதமும் அதனால் பெருகும். மற்றவர் களின் பொருட்களில் பற்று வைக்காதீர் கள். பொறாமைப்பட வேண்டிய அவசிய மேயில்லை. மற்றவர்களிடம் இருப்பதெல் லாம் உங்களிடமும் இருக்கத்தான் வேண்டுமா? சிந்தியுங்கள். நீங்கள் ஒரு விபத்தைப் பார்க்கின்றீர்கள். தெருவோரத் திலே ஒருவர் அடிபட்டு இருக்கின்றார். எனக்கும் இப்படி நடக்க வேண்டுமெனக் கேட்கின்றீர்களா? நீங்கள் எது நல்லது என்று எண்ணுகிறீர்களோ, அதன் பின்னாலே செல்கின்றீர்கள். உங்களிடம் என்ன உள்ளது என்பதனை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் அதனை அறிந்து கொண்டால், உங்களின் உள்ளே இடை விடாது வந்து போகும் “மூச்சு”, எவ்வளவு விலைமதிக்க முடியாத விடயம் என்பத னைப் புரிந்து கொள்வீர்கள். உங்களது நண்பருக்குத் தெரியாத ஒன்று உங்களுக் குத் தெரியும். அப்பொழுது உங்களுக்கு பொறாமையடைய வேண்டிய தேவை இருக்காது. உங்களது இந்தப் பொன் னான நேரத்தை சந்தோஷமாக, ஆனந்த மாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் அந்த மகிழ்ச்சி உங்களின் உள்ளேயே உள்ளது. எல்லோருக்கும் எனது நன்றி. வணக்கம்.-

பிரேம் ராவத்

---



## Math tutorial 422

Answers to tutorial 421

1) a) VA , X=-5
HA , y=0
D={x ∈ R | X≠-5 }
Y intercept =3/5
b) VA =,X=1/4
HA Y= ¼
D ={ X ∈ R | X ≠ ¼}
R = {Y∈ R | Y≠1/4}
X intercept =-5
Y int =-1
c)Hole x=-2
D ={X ∈R | X≠ -2 }

R ={Y=1/5}

2)Solve log $(35-x^3)$/(log (5-x)) =3

$35-x^3 = (5-x)^3$

$35 = (5-x^3) + x^3$

$= (5-x+x)((5-x)^2 -(5-x)(x) +x^2)$

$=5(25 -10x +x^2-5x +x^2 +x^2)$

$7 =3x^2- 15x +25$

$3x^2 -15x +18 = 0$

$X^2 -6x +6 =0$

(x-2)(x-3) =0

X= 2 or 3

3)a) $\log_5(\log_3 x) =0$

$\log_3 x = 5^0 = 1$

$X = 3^1 = 3$

3b) $\log_2(\text{loig}_4 x) = 1$

$\log_4 x = 2^1 = 2$

$X = 4^2 = 16$

Answrers to 4,5&6 will appear in next tutorial


Tutorial 422

Questions

1)If a student attempts every question on a multiple choice test consisting of 20 questions with 5 choices for each question , in how many different ways the test can be answered

ByMr.S.J.Xavier(Teacher)6473409490/416732222 8

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# தமிழ் மழை...

## - தனலக்சுமி -

* ஏன் அடைமழை என்கிறோம்?
  அடைமழை - வினைத்தொகை

* அடைத்த மழை
* அடைக்கின்ற மழை
* அடைக்கும் மழை



* விடாமல் பெய்வதால், ஊரையே 'அடை'த்து விடும் மழை - அடை மழை! அடைத்துக் கொண்டு பெய்வதாலும் அடைமழை
* கனமழை வேறு! அடைமழை வேறு

**தமிழில், 14 வகையான மழை உண்டு.**

**தமிழில், மழை**

| | |
|---|---|
| 1. மழை | 2. மாரி |
| 3. தூறல் | 4. சாரல் |
| 5. ஆலி | 6. சோனை |
| 7. பெயல் | 8. புயல் |
| 9. அடை (மழை) | 10. கன (மழை) |
| 11. ஆலங்கட்டி | 12. ஆழிமழை |
| 13. துளிமழை | 14. வருள்மழை |

* வெறுமனே, மழைக்குப் பல பெயர்கள் அல்ல. இவை ஒவ்வொன்றுக்கும் வேறுபாடு உண்டு! இயற்கை நுனித்த தமிழ்.

* மழ - தமிழில் உரிச்சொல்
* மழ களிறு - இளமையான களிறு
* மழவர் - இளைஞர்கள்

* அந்த உரிச்சொல் புறத்துப் பிறப்பதே..
* மழை எனும் சொல்! மழ + ஐ
* இளமையின் அலட்டல் போல், காற்றில் அலைந்து அலைந்து பெய்வதால், புதுநீர் உகுப்பதால் மழை காரணப் பெயர்.
* மழை வேறு / மாரி வேறு

* அறிக தமிழ் நுட்பம்! இயற்கை

* மழை / மாரி ஒன்றா?

* மழை - இள மென்மையாக அலைந்து பெய்வது, காற்றாடி போல
* மாரி - சீராகப் பெய்வது, தாய்ப்பால் போல
* மார்+இ = மாரி! தாய் மார்பிலொழுகு பால் போல், அலையாது சீராகப் பெயல்
* அதான் மாரி + அம்மன் எ. ஆதிகுடிப் பெண், தெய்வமானாள்
* தமிழ்மொழி, பிறமொழி போல் அல்ல! வாழ்வியல் மிக்கது
* அட்டகாசம்...
* இன்னும் கொஞ்சம்...

1. ஆலி - ஆங்காங்கே விழும் ஒற்றை மழைத்துளி - உடலோ உடையோ நனையாது.

2. தூறல் - காற்று இல்லாமல் தூவலாக பெய்யும் மழை - புல் பூண்டின் இலைகளும், நம் உடைகளும் சற்றே ஈரமாகும். ஆனால் விரைவில் காய்ந்து விடும்.

3. சாரல் - பலமாக வீசும் காற்றால் சாய்வாக அடித்துவரப்படும் மழை சாரல் எனப்படும். மழை பெய்யுமிடம் ஓரிடமாகவும், காற்று அந்த மழைத்துளிகளை கொண்டு சென்று வேறிடத்திலும் வீசிப் பரவலாக்குவதை சாரல் என்பர்.
* சாரல் என்பது மலையில் பட்டுத் தெறித்து விழும் மழை என சிலர் கூறுவது முற்றிலும் தவறு. (சாரலடிக்குது சன்னல சாத்து என்பதை கவனிக்கவும்)
* சாரல் - சாரம் என்பன சாய்வைக் குறிக்கும் சொற்கள், மலைச்சாரல் என்பது மலையின் சரிவான பக்கத்தை குறிக்கும். அதை தவறாக மலையில் பட்டுத் தெறிக்கும் நீர் எனப் பொருள் கொண்டு விட்டனர்.
* சாரல் மழை என்பது சாய்வாய் (காற்றின் போக்குக்கும் வேகத்துக்கும் ஏற்ப) பெய்யும் மழை என்பதே பொருள்.
* சாரல் மழையில் மழை நீர் சிறு ஓடையாக ஓடும். மண்ணில் நீர் தேங்கி ஊறி இறங்கும்.

4. அடைமழை - ஆங்கிலத்தில் Thick என்பார்களே அப்படி இடைவெளியின்றிப் பார்வையை மறைக்கும்படி பெய்யும் மழை. அடை மழையில் நீர் பெரும் ஓடைகளாகவும் குளம் ஏரிகளை நிரப்பும் வகையிலும் மண்ணுக்குக் கிடைக்கும்.

5. கனமழை - துளிகள் பெரிதாக எடை அதிகம் கொண்டதாக இருக்கும்.

6. ஆலங்கட்டி மழை - திடீரென வெப்பச்சலனத்தால் காற்று குளிர்ந்து மேகத்தில் உள்ள நீர் பனிக்கட்டிகளாக உறைந்து, மழையுடனோ அல்லது தனியாகவோ விழுவதே ஆலங்கட்டி மழை. (இவ்வாறு பனி மழை பெய்ய சூடோமோனஸ் சிரஞ்சி என்ற பனித் துகள்களை உண்டாக்கும் பாக்ரீரியாவும் ஒரு காரணமாகும். புவி வெப்பமயமாதலினால் இந்த பாக்ரீரியா முற்றிலும் அழிந்து விடக்கூடும் என அறிவியலாளர்கள் அஞ்சுகின்றனர்.

7. பனிமழை - பனிதுளிகளே மழை போலப் பொழிவது. இது பொதுவாக இமயமலை, ஆல்ப்ஸ் போன்ற மலைப் பகுதிகளில் பொழியும்.

8. ஆழி மழை - ஆழி என்றால் கடல். இது கடலில் பொழியும் மழையை குறிக்கும். இதனால் மண்ணுக்குப் பயனில்லை. ஆனால் இயற்கை சமன்பாட்டின் ஒரு பகுதி இம்மழை.

9. மாரி - காற்றின் பாதிப்பு இல்லாமல் வெள்ளசேதங்கள் இன்றி மக்கள் இன்னலடையாமல் பெய்யும். நிலப்பரப்பு அனைத்தும் ஒரே அளவு நீரைப் பெறுமாறு சீராகப் பெய்வது. அதனால் தான், கிராமங்களில் 'மாரியம்மன்' அதாவது மழைக்கான அம்மன். (இக்காரணங்களால் தான் இலக்கியங்களில் 'மாதம் மும்மழை பெய்கிறதா?' என்று கேட்காமல்... மக்கள் அவதிக்குள்ளாகாமல் 'மாதம் மும்மாரி பெய்கிறதா?' என்று கேட்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.)




### "கொறோனா"வால் - அந்தரிக்கும் அகிலத்து மக்களைநீ காப்பதெப்போ?

முந்திவந்து அருள்சிந்தி விந்தைசெய்யும் கந்தகுகா!
எந்தநாளும் ஏங்கிவாழும் சொந்தங்களுக் கருள்வதெப்போ? (முந்தி)

அந்திவண்ணன் உமையாளொடு எந்தநாளும் மகிழ்ந்திருக்கத்
தந்திமுகன் தம்பியெனப் பிந்திவந்த செந்திவேலா! (முந்தி)

சந்ததமுந் தொழுதேத்தி வந்தனையும் செய்யலையோ?
சிந்தையிலே உனையிருத்திச் சிவம்வளர்த்தோம் மறந்தனையோ?
சுந்தரம யூரமேறிச் செஞ்சரண அருள்சொரிந்து
அந்தரிக்கும் அகிலத்து மக்களைநீ, காப்பதெப்போ?

இன்றிந்தக் கலியுகத்தில் அதர்மநிலை கண்டுதானோ?
கொன்றழிக்கும் 'கொறோனா"வை எங்குமின்று பரவவிட்டாய்?
என்றென்றும் அறங்காக்கும் இனியவுன்றன் மக்களைநீ
மன்றாடிக் கேட்டிடுவேன் மால்மருகா காத்திடாயோ?

அவனியெலாம் இயற்கையதன் சீற்றமெனக் கொறோனாவை
பவனிவரச் செய்ததேனோ? பலரையது மாய்க்குதையா!
புவனமெலாம் மனிதகுலம் இயற்கைவள மழித்ததற்குச்
சிவனவனார் கற்பிக்கும் சீர்திருத்தப் பாடமிதோ?

யாதுமூரே யாவரும் கேளிரெனத் தமிழிற்சொன்ன
மூதறிஞன் பொன்மொழியை மேதினியில் மறந்ததற்கோ?
பாதகச்செயல் கற்பழிப்பு பாரெங்கும் களவுகொலை
சாதனையாகச் செய்பவர்க்குத் தகுந்தபாடம் தருவதற்கோ?

கண்டதும் கட்டியணைத்துக் கைகுலுக்கிக் கொஞ்சிடாது
காதலொடு கைகூப்பித் தூரநின்று வணங்குவதும்
உண்டிடமுன் கையலம்பி இறைதொழுது உண்பதுவும்
உயர்ந்ததமிழ்ப் பண்பென்று உலகிற்குக் காட்டிடவோ? (முந்தி)

காலணியை வெளிவிட்டுக் காலலம்பி வீடுவரும்
கடுஞ்சுத்தம் தமிழர்கள் பேணியதைக் காட்டிடவோ?
கோலமிட்டு மஞ்சள்நீர் தெளிப்பதொடு கோமயத்தால்
குடிசைநிலம் மெழுகுவதின் சிறப்பையெலாம் குயிற்றிடவோ?

ஒருவனுக்கு ஒருத்தியென்று ஓம்பிவாழ்ந்த தமிழர்தம்
ஒப்புவமை இல்லாநல் உயர்நெறியைப் பரப்புதற்கோ?
பெருவழக்காய் நோயணுகா உணவுமுறை கொண்டதனால்
பேரழிவுக் கிருமிகளும் தாக்கஅஞ்சும் வழிசொலவோ?

உலகசமா தானமுங்கள் வீட்டிலாரம் பித்தபின்தான்
உன்சுற்றம் சமுதாயம் உன்நாடு, கண்டமென்று
பலவழியிற் பரவுமெனப் பகன்றவரெம் மஹரிஷியே!
பாருலகு இதையுணர்ந்து பலன்பெறுமென் றோதுதற்கோ?

"தொன்றுதொட்டுத் தமிழரோம்பி வந்தநல்ல பழக்கமெலாம்
நன்றுநன்று உலகத்தோரே நாள்தோறும் கடைப்பிடிப்பீர்"
என்றுஅறிவித் துப்பாடம் படிப்பிக்க வோமுருகா
இன்றுஇந்தக் 'கொறோனா"வை எங்கும்நீ பரவவிட்டாய்? (முந்தி)



பல்வைத்திய கலாநிதி இளமுருகனார் பாரதி

## BASEMENT FOR RENT

**16TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, Laundry. 40% utilities. Close to all facilities. Avail. immediately
**416.618.3660 / 647.367.0220**

**MORNINGSIDE & OLDFINCH**
2 bedrooms bsmt for rent.
1 parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.7894**

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent Sep. Entrance Close To TTC high school & College University of toronto, HWY 401 & Hospital.
**Call For Sri : 647.720.2617**

**MARKHAM & ELLESMERE**
2 bedroom Newly renovated bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 07, 2020.
**please contact 416.818.8422**

**MCNICOLL & MIDLAND**
2 bedrooms, washroom and kitchen bsmt for rent. Rent $1200 per month. ladies and couple preferred.
**Contact: 647.573.7898.**

**HWY 7 & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 Parking. Close to all facilities. Avail. February 01, 2021
தொடர்புகளுக்கு: **416.737.1146**

**BIRCHMOUNT & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance. parking, laundry. Students preferred also. Avail. immediately.
**647.637.5345 /647.637.5344**

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom+1 washroom bsmt for rent. Sept. entrance, laundry. Close to all facilities. Avail. January 01, 2021
தொடர்புகளுக்கு: **416.434.0082**

**NEILSON & MCLEVIN**
2 Bedrooms Bsmt For Rent. Sep.Entrance, Parking. Avail. immediately. (For Students Girls Only or Single Family)
தொடர்புகளுக்கு: **647-773-7086**

**MORNINGSIDE & STAINS**
2 Bedroom bsmt for rent.
Sept. Entrance, 1 parking. Close to all facilities. Avail.January 01, 2021.
**416.494.7149 /647.467.1622**

**STEELES & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep.Entrance with 2 parking lot spot. No smoking & No pets (expecting Sri lankan )
Contact: **416.388.2794**

**MARKHAM & ELSON**
One bedroom basement apartment, separate entrance, near close to YRT and TTC. Avail. immediately.
**416-587-3223 or 647-937-8480.**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com


விளம்பரம் பத்திரிகை வெளியிடப்படும் (vlambaram.com) சிறு விளம்பரங்களைக் கொண்ட 14,15,16,17 ஆகிய பக்கங்களின் அச்சுப் பிரதிகளை GTA Square இலும் ஏனைய முன்னைய தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELSON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, mcCowan, Steeles & Middlefield buses 2-5 minute walking distance. Close to school.
**647.740.9967 / 647.740.1106**

**MARKHAM & DENISON**
1 bedroom walkout bsmt for tent
1 Parking. no internet. Close to all facilities
Couple or small family 3 people.
**647.339.2560 / 647.402.4435**

**WARDEN & FINCH.**
2 Bedrooms, 1 bathroom. Sep.entrance. Utilities Extra. 1 parking space. Close to all facilities. Avail. immediately.
**(647)995-2915/ (647)567-0857**

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom Bsmt for rent. Sep. Entrance Close to all facilities. No parking Avail. immediately.
Please call : **416.388.2401**

**MEADOWVALE & ELLESMERE.**
2 Bedroom, 1 bathroom bsmt for rent.
1 parking. Close to all facilities.
Avail. December 01, 2020
**Contact: 416.546.0466**

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.2708**

**MARKHAM & STEELES**
3 bedroom newly renovated, basement for rent. Sep. entrance, parking. Small family preferred. No smoking, no pets.
தொடர்புகளுக்கு: **(647) 712-2692**

**MARKHAM & HIGHGLEN AVE**
3 **bsmt for rent.** Sep. entrance, sep. laundry. Avail. December 01
தொடர்புகளுக்கு: **647-762-5804**

**16TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Rent $1,450 +utilities. Close to all facilities. Avail. immediately.
**416.618.3660 / 647.367.0220**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.

மேலும் பக்கங்கள் 15, 16, 17

## BASEMENT FOR RENT

தொடர்புகளுக்கு: **416-613-1792**

**TAUNTON & SIMCOE (Oshawa)**
3 Bedroom fully renovated bsmt for rent. Sep. entrance, Laundry, 1 1/2 Washroom, 1 Parking. Family preferred. Avail. November. **Call or text 647 388 5295**

**MCCOWN & MCNICOLL**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.823.3667**

**ELLESMERE & ORTON PARK**
2 Bedrooms Newly Renovated Basement For RENT! No Pets. Kitchen, Washroom, Parking. Available Immediately!
**Call at (647) 998-0181**

**KENNEDY & EGLINTON**
Basement apartment for rent. Walk to Subway. Available immediately.
தொடர்புகளுக்கு: **416-833-7729**

**Morningside & Morningview Trail**
2 Bedrooms newly renovated Bsmt for Rent. Living room & 1 parking. Family preferred.
தொடர்புகளுக்கு: **(416) 564- 4200**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom furnished Bsmt for Rent. Sep. Entrance. No pets or no smoke. Close to 401, mall, ttc @door uft, centaial. Parking
**416.834.1081/kugancanada@yahoo.com**

**ELLESMERE & NEILSON**
1 room fully renovated bsmt for rent. kitchen, Sep. entrance, Sep. patio Sep. laundry. Family preferred.
**Please call: 416.560.1812**

**MARKHAM & STEELES**
3 bedroom bsmt for rent. Sep.entrance, laundry, utilities.Close to bus, bank, store. Avail. immediately.
**647.772.5546 / 647.856.9907**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 bedroom, Kitchen, separate entrance and separate laundry, parking, closer to all the facilities.
**Phone number:**
**416.824.5299/647.448.5117**
**647.922.5117**

## ROOM FOR RENT

**ELLESMERE & ORTON PARK.**
Room for rent in basement apartment with sep. entrance. Available now. Utilities included. Male tenant only.
**416.701.0667 / 647. 928.0667**

**NEILSON & MACLIVEN**
2 Room for rent in townhouse. No parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.993.4951**

**9Th LINE &14Th AVE.**
(Legacy Neighborhood)
YRT stop in front of the house
Parking and Amenities included
**Call (416) 648-1987 or (416) 669-3549**

**MARKHAM & SHEPPARD**
1 bedroom for rent in a house. No parking. Only for male. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.648.1673**

**MARKHAM & EGLINTON**
1 room for rent. Shared washroom., kitchen, wifi Included. Close to all facilities. Seniors preferred.
தொடர்புகளுக்கு : **647.339.1989**

**MARKHAM & ELLESMERE**
1 master bedroom for rent a 2 bedroom apartment. Rent. $875. Female or couple preferred. Avail. December 01, 2020.
**Please call: 416.725.4735**

**LAWRENCE AVE & MORNINGSIDE**
1 Room for rent in a basement. Looking for a Male. Sep.entrance, car parking, and laundry included. Close to TTC & malls.
**416.509.3848 / 365.338.3406**

## BASEMENT FOR RENT

**HWY 7 & 9TH LINE**
2 bedroom high Ceilings basement Apartment for rent. Sep.entrance. kitchen, parking, Laundry, Elementary, high schools. Closed to all facilities. No pets. Couple or small family preferred. Avail Immediately.
தொடர்புகளுக்கு: **416.834.3568**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE& MEADOWVALE**
2 bedroom basement. apartment for rent. Includes parking, laundry and utilities. Close to all amenities. Available immediately.
**416-431-6567 or 647-671-6986**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry. Big open kitchen. Washroom. 1min. walk to TTC (#133, #39B, #116, #53A)
தொடர்புகளுக்கு: **(416).678.4849**

## BASEMENT FOR RENT
**NEILSON & SHEPPARD**
1 Bedroom basement for rent. Sep. entrance. laundry. Single female students or couple preferred. Close to all facilities. Avail. immediately.
**416.358.5859 / 647.569.7022**

## BASEMENT FOR RENT
**MCLEVIN & NEILSON.**
1 room with open concept, full bathroom. Shared kitchen. No smoking. Ready to move in anytime.
**Contact number: 647.780.2463 or email at dharansris06@gmail.com**

## BASEMENT FOR RENT
**TAPSCOTT & FINCH** -3 Bedrooms & 2 full washrooms bsmt for rent. Rent $1800 + 50% utilities.
**MARKHAM & PAINTED POST** - 3 Bedrooms & 2 full washrooms bsmt for rent. Rent $1800 + 50% utilities. **No smoke, no Alcohol & no pets. Avail. immediately.**
**647.855.2148 / 647.985.6101**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLD FINCH**
2 large bedrooms & a full washroom 1 Parking included , with sep. entrance, close to TTC , school , and all facilities. If need extra parking also avail. with extra payment, bachelors preferred, no pets, no smoke and alcohol.
தொடர்புகளுக்கு: **647-982-2160**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE AVE. & MORNINGVIEW**
2 bedroom bsmt for rent. Sep. entrance. 1 parking, laundry. Close to all amenities. NO SMOKING & NO PETS. New couple or small family preferred. Avail. immediately. Rent plus utilities.
**Please call: 416.560.0327 After 6:00pm**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
2 bedroom basement (large) Separate entrance Parking, Sep. Laundry Avail. January 01, 2021.
**Contact : 647.989.0463**

## BASEMENT FOR RENT
**BIRCHMOUNT RD & SHEPPARD AVE**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to main rd, betchelore, girls student welcome. Avail. November 01, 2020. contact:
**416.899.9199**

## BASEMENT FOR RENT
**BELLAMY & ELLESEMERE**
3 bedroom Basement for rent. Sep.entrance, car parking, laundry, Internet. Close to all facilities. Avail. Immediately.
**437.239.4596/647.920.3019**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLD FINCH.**
2 bedrooms Walkout Bsmt for rent. 1 washroom. 1 parking. Nearest intersection is Avail. on December 15, 2020.
**416.710.8304/ 647.717 9157**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
Brand new two-bedroom basement for rent. Sep.entrance. Spacious, modern and bright. No pets. Heated flooring & escape window present. Avail. immediately!
**Call: (416) 875-4377**

## BASEMENT FOR RENT
**KINGSTON & MORNINGSIDE.**
1 Room for rent. Laundry available. We are looking for females only. Avail. immediately.
Pls call: **416-289-9507**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 bedroomsbsmt for rent. Close to Walmart and Costco. Very convenient area for schools and highschools. Has a sep. entrance. 2parking spaces. No smokers and pets allowed. Avail. January 01, 2021.
தொடர்புகளுக்கு: **(647)-761-5599**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 Bedroom Newly Renovated basement for rent. Separate entrance, kitchen, 1 and a half bathrooms, parking, laundry. Close to all facilities including grocery stores, gyms, malls and etc. Avail. Starting December 01, 2020
**Contact: 647-786-2307**

## ROOM FOR RENT
**KENNEDY & EGLINTON**
Rooms for rent( brand new). Sep.entrance. parking. Subway station located walking distance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-501-2720**

## CONDO FOR RENT
**SUMACH & DUNDAS STREETS**
1 bedrooms + dent condo for rent. Close to all facilities. Avail. December 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.993.4951**

## ROOM FOR RENT
**MARKHAM & ELLESMERE**
1 room for rent in a 3 bedroom apartment. All males welcome to apply for rental. room including students (male only). Monthly Rent = $500. Avail. immediately
**Thas: 416-420-1309**
**Siva: 416-710-5133**

## HOUSE/BASMENT FOR RENT
**BELLAMY & LAWRENCE**
Newly renovated 3 Bedroom **House** for rent. No smoking allowed inside! Family preferred who can maintain the house. Parking included. AVAILABLE ANYTIME! Brand new 1 Bdrm **bsmt** for rent. Parking included. Prefer couples or single female
தொடர்புகளுக்கு: **416.505.9465**

## HOUSE FOR RENT
**NEILSON & MCLIVEN**
3 Bedroom house for Rent. parking, laundry. Close to all Facilities. Avail. immediately.
**647.534.5617 / 416.609.1484**

**Ellesmere & Orton Park**
MAINFLOOR for RENT. 3 Bedroom Newly Renovated No Pets. Washroom, kitchen, Parking. Avail. immediately.
**Call at (647) 998-0181**

## HOUSE FOR RENT
Split Level 3 House for Rent
**Meadowvale & Ellesmere -** Close to UofT & Hwy 401. Newly renovated 4 Bedrooms, 2 Washrooms house for rent. Sep.entrance, 2 or more Parking, sep.laundry, Gas Fireplace, Private Patio deck. Close to All amenities, TTC & Durham Region Transit. Available immediately. Girl Students or family Welcome.
Contact: **416-871-2475**

## HOUSE FOR RENT
**MIDLAND & MCNICOLL**
3 Bedroom + 2 washroom house with finished basement ( 2 Bed+1 washroom) for rent. Close to all facilities.
**Contac: 647.542.4439**

## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது அழையுங்கள்.**
**647.861.8240**

## CONDO FOR RENT
**HWY 401 & KENNEDY**
3 Bedroom luxury condo. for rent. 1 Parking. Close to all facilities. Avail. December 01, 2020.
தொடர்புகளுக்கு : **416.464.3551**

## HOUSE FOR RENT
**NEILSON & ELLESMERE**
3 bed house (bungalow ) for rent. Rent $2,300. 1.5 washrooms. Master bedroom with walk-in closet & ensuite 2 pc washroom & 1 full washroom, plus Utilities 60% including car garage & total 2 parking. Avail. immediately
**call Ganesh 416-880-3636**

## CONDO – TOWNHOUSE FOR RENT
Location: **9th Line & HWY 7,** directly facing **Stouffville** Hospital. Two bedrooms, Two full bathrooms (Ground level) with Parking & Locker room. Available immediately.
**Call: 416.464.3551**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTAIL**
1 bedroom basement for rent.
**BRIMLEY & STEELES**
3 bedrooms house for rent.
தொடர்புகளுக்கு:
**647.686.8590**

## FOR RENT
**HOUSE FOR RENT**
**NEILSON& MCLEVIN - Scarborough**
3 bedroom 2 story detached house with 2 bedroom bsmt with 2 car garage full house for lease. Avail. November 01, 2020.

**BASEMENT FOR LEASE**
**9th LINE & 14TH AVENUE-Markham**
2 Bedroom fully renovated bsmt with 2 car parking, sep. laundry. Avail. immediately.

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## SALE / RENT
**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**
**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

மேலும் பக்கங்கள் 14, 16, 17

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## திருமணசேவை

திருமண சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## பராமரிப்பாளர் தேவை

**KENNEDY & EGLINTON**

We are looking for a caregiver, who can stay and take care of an elderly woman.

வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பாராமரிப்பாளர் தேவை.

**Contact: Mohan - 647.806.8435**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## பராமரிப்பாளர் தேவை

US (Geojia) இல் வாழும் இரு குழந்தைகளைப் பார்க்க ஆள் தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு: **647-491.4975**

## DRIVER/WAREHOUSE WORKER WANTED

We are looking for a driver/warehouse worker with clean driver's record. Must have G licence. Tamil/ Hindi or Punjabi speaking. Monday to Friday 9am - 5:30pm. Up to $20 Per hour. Hiring Immediately.

All inquiries to be emailed to: **pankajs37@hotmail.com**

## AZ/DZ DRIVERS WANTED

Experienced drivers wanted immediately (At least one year) for long & short run with in Canada. Full time, Part time & on call. SPS Transporation Private LTD. **647.528.2224 / 647.830.4644**




## வேலை வாய்ப்பு / HELP WANTED

**தமிழ் உணவகம்** **MCCOWAN & HWY 7 (MARKHAM)**

**வாடிக்கையாளர் சேவை / Cashier**

FULL / PART TIME. TRAINING PROVIDED

Pleace Call: **647.802.7021**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MILITARY TRAIL**

2 Bedroom walk out basement with living room, Kitchen, bathroom, Laundry and parking. close to all facilities. no pets / no smoking, $1600 plus utilities. Available from December 01, 2020

**Call or text 647.297.6552**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & HWY 401**

2 Bedroom 1 Bathroom Basement unit in Scarborough. Looking for students or families. Close to University of Toronto, Centennial College, TTC, GO stations, and Walmart. No pets, no smoking, no parking available. Laundry available. Everything is very close by and convenient.

**Contact for more info at 647.296.9565.**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MILITARY TRAIL**

2 Bedroom walk out basement with living room, Kitchen, bathroom, Laundry and parking. close to all facilities. no pets / no smoking, $1600 plus utilities. Available from December 01, 2020

**Call or text 647.297.6552**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட

அழையுங்கள்: **647.402.2937**

மேலும் பக்கங்கள் 14, 15, 16, 17



# wpm Property Management

*Markham* - Markham / Major Mackenzie – Bsmt
(2 Brm + 1Bath) Great Location. Completely Renovated. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit. 1 Parking **[Asking $1550/m]**

* *Scarborough* – Ellesmere Rd / Military trail – Bsmt
2 Rooms Available for Students Or Professional. Rent included Utility & Internet. Walking distance to U Of T Scarborough. Close to Ttc & Hwy 401. **[Asking - $550/m]**

* *Scarborough* – Ellesmere Rd / Military trail – Bsmt
2 Rooms Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Asking each- $550/m]**

**Toronto* - York St / Harbour St – Condo Apt
(1 Brm + 1 Bath) Located In Prime Downtown Toronto. Walk To Financial District, Harbour Front, Public Transit, Union Subway And Go Station. **[Contact 647-913-9241]**

* *Scaroborugh* – Brimley & Ellsemere – Condo Apt
(1+1 Brm + 1 Bath) Few Minutes Drive To The Hospital And Hwy 401. Convenient Location For All Needs. Well Maintained Building With 24/7Security, Has Gym And Swimming Pool. **[Asking each- $1900/m]**

* *Scaroborugh* – Kennedy & Hwy 401- Condo APt
(1 Brm + 1 Bath) 1 Parking Available. Close To 401, Shopping, Library, Restaurants And Ttc **[Asking each- $1595/m]**

**Scarborough* – Brimley & Ellsemere – Condo Apt
(1Brm + 1Bath) Close To All Amenities Including Both Ttc Subway And Go Station, Schools, Parks, And Shopping. **[Asking each- $1600/m]**

**Brock* – King & Mara Rd- Detached
(4 Brm + 3 Bath) Double Garage. Walking Distance To Park, School, Marina, Golf, Banks And Shopping **[Asking each- $2300/m]**

➡ வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு நல்ல வருமானம் தேட விரும்புகிறீர்களா? அல்லது
➡ ஏற்கனவே நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டில் வாடகைப் பிரச்சனைகளின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க நம்பிக்கையான நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?
➡ நீங்கள் ஏற்கனவே வாழ்ந்துவரும் சொந்த வீட்டிலிருந்தே கடனை எடுத்து வீட்டை வாங்கும் தகுதி உங்களுக்கு இருக்கலாம்.

இத்துறையில் எனது 32 வருட அனுபவமும் எமது (WPM) Property Managemant நிர்வாகமும்
இதை உங்களுக்கு திருப்திகரமாக செய்து தரும் என்பதை முழுதாக நம்பலாம்.

**நம்பிக்கையுடன் அழையுங்கள்: கரு கந்தையா 416.616.7278**

**MANAGING RESIDENTIAL PROPERTIES**
**Watsonpm1989@gmail.com**

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!
## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

***You can relax while we take care of your investment property!***

**WATSON** PROPERTY MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



**Karu Kandiah** Director
30+ Years in Real Estate

# சூரரைப் போற்று - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

இவ்வருடத் தீபாவளி வெளியீடான இப்படம் Air Deccan என்ற குறைந்த செலவு விமான சேவையை ஆரம்பித்த வரான Captain கோபிநாத் தனது வாழ்க்கையைப் பற்றி எழுதிய Simply Fly என்ற புத்தகத்தில் வரும் சில காட்சிகளை வைத்து எடுக்கப்பட்டது. திரையில் வெளியிட இருந்த இப்படம் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலால் Amazon Primeஇல் வெளியிடப்பட்டது.

இப்படத்தில் சூர்யா, நெடுமாறன் ராஜாங்கம் என்ற கதாபாத்திரத்தில் ஒரு ஆசிரியரின் மகனாக நடித்துள்ளார். அவர்களது சிறு கிராமத்தில் பல வசதி கள் இல்லாதபடியால் மக்கள் கஷ்டப் படுகின்றனர். இதைச் சரிசெய்ய மாறனின் தந்தை அதிகாரிகளுக்கு முறைப்பாட்டுக் கடிதங்கள் எழுதுகிறார். இது போதாது என நினைக்கும் மாறன் கருத்து வேறு பாடுகளால் தந்தையை விட்டுப் பிரிகிறார்.

மாறனின் கனவு எல்லாம், மக்களுக்கு மின்சாரம், மகிழுந்து, தொடருந்து போன்றவை தற்போது கிடைக்கின்றன, இதுபோலவே விமானத்தில் ஏறுவதும் குறைந்த செலவில் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என விரும்புகிறார். மிகவும் போட்டி நிறைந்த விமானத்துறை யில் இவ்வாறு மக்களுக்கு ஒரு ரூபாவுக்குப் பயணச்சீட்டு விற்க விரும்பும் மாறனுக்குப் பல சவால்கள் வருகின்றன. இவற்றை மாறன் எவ்வாறு தோற் கடிக்கிறார் எனப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.



படம் விமானச் சேவையையும், தொழிலையும் பற்றியதாக இருந்தாலும், வழமைபோல் மாறனின் உறவுகளைப் பற்றி விவரிக்கிறது. மகனுக்கும் தந்தைக்கும், தாய்க்கும், நண்பருக்கும், இந்திய விமானச் சேவையில் படித்தபோது ஆசிரியருக்கும், கதாநாயகியான பொம்மிக்கும் இடையிலுள்ள உறவுகள் இங்கு வர்ணிக்கப்படுகின்றன. இவற்றை இன்னும் கொஞ்ச நேரம் விரிவாக காட்டி யிருக்கலாம். எதிர்கொள்ளும் பிரச்சினை களும் Captain கோபிநாத் உண்மையில் அனுபவித்த சம்பவங்களையும் இப்படம் காட்டுவதால் உறவுகளை விரிவாகக் காட்ட முடியவில்லை போலும்.

இருந்தாலும் மாறனுக்கும் அவரின் மனைவி பொம்மிக்கும் இடையில் வளரும் உறவு நன்றாகக் காட்டப்படுகிறது. இப்படம் போல் கதாநாயகனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் மற்ற கதாபாத்திரங்கள் பற்றி, குறிப்பாக கதாநாயகியான காதலி/மனைவியைப் பற்றி விரிவாகக் காட்டப்படுவதில்லை. Captain கோபிநாத்தின் உண்மையான மனைவியான பார்கவியை அடிப்படை யாக வைத்து பொம்மி கதாபாத்திரம் எடுக்கப்பட்ட படியால், பொம்மியும் தனது தொழில், கனவு என தனது வாழ்க்கையை வாழுகிறார். மாறனைப் போல் தனக்கு என்ன வேண்டுமென மிகவும் தெளிவாக உள்ளார். அவர் மாறனைவிட தைரியமும் குறிக்கோளும் உள்ளவராக இருக்கிறார். அவர் மாறனைத் திருமணம் செய்யச் சம்மதிக்க முன்னர் அவருக்கு போடும் விதிமுறை களும், அவருடன் போட்டிபோட்டுத் தனது தொழிலை வளர்க்கும் காட்சிகளும் படத்தில் அழகாக எடுக்கப்பட்டுள்ளன. பொம்மி மாறனின் தொழிலுக்கும் துணையாக இருக்கிறார்.

வழமையான படங்களில் வருவது போல் அல்லாமல், தமக்குத் தனித்தனியே இலட்சியக் கனவுகளை உடைய இருவருக்குமிடையே வாழ்க்கை நன்றாகச் செல்வதுபோலக் காட்டப்படுகிறது. இவர்களுக்கு இடையே பிரச்சினை வளர முன்னமே தீர்க்கப்படுகிறது. ஒருமுறை மட்டும் மாறன், இன்னொரு தோல்வி யடைந்து வீடு திரும்பியவுடன் பொம்மி யுடன் சண்டையைத் தொடங்குகிறார். பொம்மியின் தொழிலைக் குறைசொல்லி, அவர் திருமணத்திற்குமுன் போட்ட விதிமுறைகளில் ஒன்றை மீறுகிறார். இதற்கு பொம்மி தெளிவான பதில் கூறுகிறார். இத்துடன் சண்டைக்காட்சியை முடித்திருக்கலாம். ஆனால் இத்தருணத் தில் மாறன் பொம்மியை அடிக்கிறார். வழமைக்கு மாறாக நன்றாக எடுக்கப்பட்ட திரைப்படத்தில், மனைவியை அடிப்பது ஒரு தேவையற்ற காட்சியாக அமைகிறது.



இச் சம்பவத்தையும் தைரியமாக எதிர் கொள்ளும் பொம்மியும் மாறனும் ஒற்றுமையாக எவ்வாறு தங்களது இலட்சியங்களை அடைகின்றனர் என்பதே மீதிப் படம்.

Air Deccan கதையை விளக்கும் இப் படத்தை அனைவரும் பார்க்க வேண்டும்.

# வேழமுகத்து விநாயகன்

செம்மணத்தம் புலம் உறையும் தேவா!
செம்மனத்தார் புலம் விளங்கும் செல்வா!
வெம் மனத்தார்க்கு எட்டாத வேழ முகா!
செம்பரத்தம் மலர்தூவி சேவிக்கின்றோம்!



அலை ஓலமிட்டு உன்னடி பரவும்
அருகிலுள்ள கணேச வித்தியாசாலை மாணவர்
ஆதி நாயகனை நினைத் தொழுதே -நாளை
ஆரம்பித்தே கல்வி நலம் அடைவாரன்றோ!

முதற் பூசை பெறும் முதல்வா மும்மலத்தின்
வலியகற்றும் வல்லவனே வரம் தருவாய்
கரம் கூப்பி தொழுகின்றோம் காதலினால்
நிரந்தர அமைதி நிலவுலகில் நிலைத்திட அருள்வாய்!

அப்பம் முப்பழம் அமுது செய் தருளும் நினக்கு
வேண்டிய இவற்றை விருப்புடன் படைப்பார்
தெம்புடனே வாழவைக்கும் திருமாள் முருகா
செப்பரிய அருள்வளத்தின் செல்வச் சீமானே

மணிபல்லவம் என மாண்புறும் நயினையின் தென்பால்
மகிழ்ந்துறையும் மகிபனே மட்டற்ற அன்பால்
தினமுனது சேவடி சேவிக்கும் திறத்தால்
நலம் பெற்று நந்நிலை அடைகின்றோம் யாம்.

மணித்தீவு, மணபல்லவம் என மாண்புறும் நயினைதீவு, சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவது. சர்வ மத சந்நிதி என சாற்றப்பெறும் இச்சிறு தீவில் சர்ப்பம் தொழுதேற்றும் சர்வ வல்லமையுடைய சக்தி பீடம் அமைந்துள்ளது. பத்திற்கு மேற்பட்ட ஆலயங்கள் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க, ஆன்மீக வளமுள்ள இத்தீவில் பெரிய ஆலயமாக விளங்குவது நாகபூசணியம்மன் ஆலயமாகும். அதற்கு அடுத்து விளங்குவது நயினையின் தென்பால் செம்மணத்தம் புலம் எனும் பதிப்பில் அமைந்துள்ள 'ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்' ஆகும். ஆண்டு மகோற்சவம் நடைபெறும் இவ்வாலயத்தில் சித்திரப் புதுவருடத்தன்று சித்திரைத்திருத்தேரில் வேழமுகன் பவனி வந்து அடியார்களுக்கு காட்சி தருவார். சூழும் அடியவர் வேழமுகனை ஆழமான பக்தியுடன் தலை தாழ்த்தி வணங்குவர்.



நா.க சிவராமலிங்கம்

# பாரதி ஏன் பிறந்தார்...!

ஆயிரத்து எண்ணூற்றி எண்பத்தியிரண்டு
அருள்நிறை மாதமாம் மார்கழிபதினொன்றில்
வைரமாய் ஒளிவிடும் பாவலன் பாரதி
வந்து பிறந்தனன் ஏட்டயபுரமெனும்
தாயினைப்போல் காக்கும் எழில்மிகுபதியில்
தமிழ்கடவுளாம் சுப்பிரமணியனின் நாமமுடன்
கோயிலில் பணிசெய்யும் சின்னச்சாமி ஐயருக்கும்
கோமகள் லட்சுமிக்கும் மகனாய்ப்பிறந்தனர்!

அடிமைத்தளை அறுக்கப் பிறந்தனனோ?
அகிலம் போற்றிடப் பிறந்தனனோ?
விடிவுக்கு வழிசமைக்கப் பிறந்தனனோ?
விந்தைமிகு விடுதலைக்கீத மிசைக்கப் பிறந்தனனோ?
கொடிய சாதிக்கொடுமையினை மண்ணிலேயே
கொன்றொழிக்கவே வந்து பிறந்தனனோ?
படிப்படியாய் வெள்ளையரை பெருமைமிகு
பாரத மண்ணை விட்டோடவைக்கப் பிறந்தனனோ?

பெண்ணின் பெருமைதனை அறியாமூடரின்
பேதமை நீக்கிடப் பிறந்தனனோ?
மண்ணில் அவர்தம் கடமைதனையுணர்த்தி
மாண்புடன் வாழவைக்கப் பிறந்தனனோ?
எண்ணில் ஏற்றத் தாழ்விலாதென்றும்
எளிய வாழ்வின் சீர்சொல்லப் பிறந்தனனோ?
விண்ணில் ஒளிரும் வெண்ணிலவாய்
வீரஒளி தந்திடப் பிறந்தனனோ?


தேசவிடுதலைக்காக மக்கள் மனங்களில்
தெள்ளுதமிழ் கவிதைகள் விதைக்கப்பிறந்தனனோ?
பாசம்மிகும் பாப்பாக்களுக்கு நல்ல




மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த தினம்
11. 12. 2020

பாடல்கள் தந்திடப் பிறந்தனனோ?
நேசமுடன் வானில் சிறகடிக்கும் சிட்டுக்குருவிக்கும்
நெஞ்சையள்ளும் பாடல்தரப் பிறந்தனனோ?
நீசரும் வெட்கித் தலைகுனிய மாண்புடன்
நேர்மையின் சீர்சொல்லப் பிறந்தனனோ?

வறுமையில் செம்மையாய் வாழும்நல்ல
வழிகளைக் காட்டப் பிறந்தனனோ?
பொறுமையின் எல்லையை யாவர்க்குமுணர்த்தி
போராடினால் வெற்றி உண்டென
கூறுதற்காய் வந்து பிறந்தனனோ?
கூடிவாழ்ந்தால் கோடி நன்மையென
ஆறுதல் சொல்லிட வந்துபிறந்தனனோ?
அகிலத்தில் எங்கள் கவி பாரதி!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# டீகோ மரடோனா - 'கால்பந்து கடவுள்'

அர்ஜென்டினாவின் முன்னாள் கால் பந்தாட்ட வீரரும், 'கால்பந்து கடவுள்' என அழைக்கப்பட்டவருமான டீகோ மரடோனா வின் மறைவு ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவர் 1960ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி பிறந்த இவர் அர்ஜென்டினா அணிக்காக 91 ஆட்டங்களில் 34 கோல்களை அடித்து சாதனை புரிந்துள்ளார். மரடோனா, 1977 ஆம் ஆண்டு ஹங்கேரி அணிக்கு எதிரான போட்டியில் தனது 16வது வயதில் ஆர்ஜெண்டினா தேசிய காற்பந்து அணி யின் சர்பில் சர்வதேச போட்டியில் தடம் பதித்தார்.

18ஆவது வயதில் அர்ஜென்டினாவிற்காக FIFA World Youth Championship போட்டியில் விளையாடி, சோவித் யூனியன் அணிக்கு எதிராக வெற்றி பெறக் காரணமானார். 1979இல் ஹாம்டென் பார்க்கில் நடைபெற்ற போட்டியில், ஸ்கொட்லாந்து அணிக்கு எதிராக விளையாடி தனது முதல் முதுநிலை சர்வதேச கோலை பதிவு செய்தார்.

1986ஆம் ஆண்டின் உலக கோப்பை கால்பந்து போட்டியில் அர்ஜென்டினா அணி, மேற்கு ஜெர்மனியை வீழ்த்தி கோப்பையை கைப்பற்ற, முக்கிய பங்கு வகித்தவர் மரடோனா. நான்கு உலக கோப்பை போட்டிகளில் பங்கேற்ற இவர், 2008ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் அர்ஜென்டினா தேசிய கால்பந்து அணி யின் பயிற்சியாளரானார். அவரது மறைவுக்கு முன்னர் வரை அர்ஜென்டினா அணியின் மேலாளராக இருந்தார்.

எப்போதும் சிறந்த கால்பந்தாட்ட வீரர்



என்று கருதப்பட்ட மரடோனா, அவ்வப் போது சர்ச்சைகளிலும் மாட்டிக்கொண்டார். 1986ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில், இங்கிலாந்துக்கு எதிரான போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில், மரடோனா அடித்த பந்து இங்கிலாந்து கோல் காப்பளர் பீற்றர் ஷில்டனைத் தாண்டி வலைக்குள் விழுந்தது. அது கோல் என்று அறிவிக்கப்பட்டதால், அர்ஜென்டினா வெற்றி பெற்றது. ஆனால், மரடோனாவின் கையில் பந்து பட்டு வலைக்குள் விழுந்தது என பெரும் சர்ச்சை எழுந்தது. சற்றும் பதற்றமடை யாத மரடோனா, 'பந்து எனது கையில் படவில்லை, கடவுளின் கைதான் பந்தைத் தொட்டு கோலாக்கியது' என சமாளித்தது பிரபலமானது.

1997ஆம் ஆண்டில் தனது 37ஆவது பிறந்தநாளின்போது விளையாடுவதில் இருந்து ஓய்வு பெற்றார் மரடோனா. கடந்த இரு வாரங்களுக்கு முன் மூளையில் அறுவை செய்யப்பட்ட பின்னர், வீட்டில் சிகிச்சை பெற்று வந்த மரடோனா மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். மரடோனாவின் திடீர் மறைவு கால்பந்து ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வசந்தம் வழங்கும் சமூகஉளநலம் பேணும் கருத்தாடல் தொடர் 4

## போதையின் பாதையில் எங்கே செல்கிறோம்? நினைவை இழந்துவிட்டோரின் நிலைமைகள்…



பிரபாஜினி கருணாகரன் தற்போது வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையத்தில் தமிழ்-கனடா உளநலப் பணியாளராகக் கடமையாற்றுகின்றார். பிரபாஜினி Trent பல்கலைக்கழகத்தில் உளவியல் துறையில் விஞ்ஞான இளங்கலைப் பட்டத்தையும், போதைநாட்டமும் உளநலனும் பாடநெறிச் சான்றிதழையும் பெற்றவர். இவர் தற்போது தமிழ்-கனடா ஆண்களிடையே தற்கொலை என்ற ஆய்வு ஆராய்ச்சியில் வசந்தம் - Ryerson பல்கலைக்கழகத்துடன் இணைந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ளார். விடய முகாமைத்துவ அனுபவத்துடனும், ஊறுபடுத்தலை அனுபவித்த பெண்கள் மற்றும் பிள்ளைகளுடனான சேவை அனுபவத்துடனும், இவர் தனித்துவத்தின் முக்கியத்துவம், உளநல சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதில் பன்முகப்பாடு மற்றும் பண்பாட்டின் பங்கு போன்றவற்றுக்காக வாதாடி முன்னெடுப்புக்களைச் செய்து வருகின்றார். 2015 இலிருந்து, பிரபாஜினி விற்பியில் உள்ள உளநல விஞ்ஞானங்களின் ஒன்றாறியோ ஷோர்ஸ் (Ontario Shores for Mental Health Scienceses ) என்ற மாபெரும் நிறுவனத்தில் வாழ்வுப் பணிச் சேவைகளில் உள்ள இளையோருடனும் முதியோர் துறையிலும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். மேலும் பிரபாஜினி ஒரு நினைவாற்றலை வளர்க்கும் ஆசிரியரும், உளவளத்தை ஊக்குவித்து வாழ்வின் தரத்தை மேம்படுத்தும் இயங்கியல் நடத்தைசார் சிகிச்சைத் திறன்கள்பற்றிக் கற்பிப்பவரும் ஆவார்.

**வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம் zoom இணையவழியாக கலாநிதி பார்வதி கந்தசாமி தலைமையில் நடத்தி வரும் சமூக உளநலம் பேணும் கருத்தாடல் தொடரில் நொவம்பர் 02ஆம் திகதி பங்கேற்ற பிரபாஜினி கருணாகரன் அவர்களின் உரையாடல்:**

**கட்டிளம் பருவத்தினரின் போதைப்பொருள் பாவனையில் பெற்றாரியம் தமிழில் மொழிமாற்றம்: பார்த்திபன் வடிவேலு**

எனது பெயர் பிரபாஜினி. எனது தமிழ்பேசும் திறன்கள் மிகச்சிறப்பானதல்ல. இதனால் நான் ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசவேண்டியிருக்கிறது. நான் தற்போது வசந்தத்தில் வேலை செய்கிறேன். வசந்தத்தில் புதிய நிகழ்வுத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் போதை நாட்டமுள்ள இளையோர், பதின்ம வயதினர், இருபது வயதுகளின் ஆரம்பங்களிலுள்ளவர்களுக்கு ஏதாவது போதைப்பொருட்கள் அல்லது மதுபாவனைப் பழக்கம் இருந்தால் நாங்கள் அவர்களுக்கான தகுந்த சேவைகளுடன் தொடர்புபடுத்தும் வேலைகளைச் செய்து கொடுப்போம். இது ஓர் ஆதரவுக் குழுவாகச் செயற்படுகின்றபோதிலும் தனிப்பட்ட ஆலோசனை, ஆற்றுப்படுத்தல் போன்ற சேவைகளையும் உள்ளடக்கும். கோவிட் தொற்றுநோய் காரணமாக சூம் இணையவழியாகவே சேவைகள் நடைபெறுவதால் வீட்டில் இருந்துகொண்டே இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். வசந்தத்தில் வேறோரு குழு, பிரச்சினையாக மாறும் சூதாட்டம் மற்றும் பந்தய விளையாட்டுகள் போன்ற பிரச்சினைகளுக்கான சேவைகளை வழங்குகிறது. தற்போதைய சூழ்நிலையில் பல இளையோர் கூடிய நேரத்தை கணினிப் பாவனையிலும் வீடியோ விளையாட்டுகளிலும் செலவழிக்கின்றனர். இப்படியான செயற்பாடுகள் ஒருவிதமான நாட்டத்தை உருவாக்குவதோடு தனிமைப்படுதலுக்கும் வழிவகுக்கிறது. சிறுவர் உடற்பயிற்சியில் ஈடுபடுவதோ பொருத்தமான சமாளிக்கும் வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதோ இல்லை. இதனால் போதைப்பொருள், மது போன்ற பிரச்சினைக்குரிய அடிமைப்படுதல்களுக்கு ஆளாகின்றனர். அநேகமாக போதைநாட்டம் அல்லது அதற்கு அடிமையாதல் பற்றிப் பேசும்போது மது மற்றும் போதைப்பொருட்கள் பற்றியே நினைக்கிறோம். ஆனால் இவை தவிர்ந்த வேறு நாட்டங்களான உணவுஅவா, சூதாட்டம், பந்தய விளையாட்டுகள் போன்றவையும் ஒருவித அடிமைபடுத்தலுக்கான காரணிகளாகும்.

கடந்த மாதங்களில் மிகையான போதைப்பொருள் பாவனையால் இறந்தவர்களின் எண்ணிக்கை தமிழ்ச் சமூகத்தில் பெருமளவு அதிகரித்துள்ளது. உயர்நிலைப்பள்ளி மாணவர்களில் 75 வீதமானோர் தாங்கள் மது மற்றும் போதைப்பொருள்களை தவறாகப் பயன்படுத்தியதாகவோ துஷ்பிரயோகம் செய்ததாகவோ சொல்கிறார்கள். நான் இங்கே பெற்றாரியம், பிள்ளை வளர்ப்புபற்றி பேசவந்துள்ளேன். பெற்றோர்கள் முக்கியமாக பிள்ளைகளின் வளர்ப்பைப்பற்றியோ அவர்கள் வளர்ந்துவரும் சூழல் பற்றியோ நினைப்பதில்லை. ஒரு குடும்பத்தின் செயலிழப்பு, சண்டை சச்சரவுகள், பெற்றோருடைய உளநலப் பாதிப்பு போன்றவை ஏற்படும்போதே பிள்ளைகளின் வளர்ப்பு பற்றிய நினைப்பு வருகிறது. சாதாரணமாகச் செயற்படும் ஒரு குடும்பத்தில் சில நுட்பமான விஷயங்கள் பதின்ம வயதினரையோ இளையோரையோ பாதிப்பதால் போதையை நாடிப் போகவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இங்கேதான் பெற்றாரியம் என்ற கடப்பாடு முக்கியம் பெறுகிறது. சில பெற்றோர்கள் கண்டிப்பானவர்களாகவோ சர்வாதிகாரிகளாகவோ இருக்கின்றனர். பாடசாலையில் கிடைக்கும் பாடத் தரங்கள், பாடத்திட்டம் சாராத ஏனைய நடவடிக்கைகளில் கவனம் செலுத்துமாறு பிள்ளைகளை அளவுக்குமீறி ஊக்குவிக்கின்றனர். இதனால் பிள்ளைகளுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. எங்கள் தமிழ் சமூகத்தில் இப்படியான பெற்றோர்கள்தான் புத்திசாலித்தனமான பிள்ளைகளை உருவாக்குகின்றனர் என்ற எண்ணம் இருந்துவருகிறது. இப்படியான மனப்பான்மையும் இளையோரின் போதைநாட்டத்திற்கு ஒரு காரணமாக இருக்கிறது. அவர்களின் சுயமரியாதை சிறிதுசிறிதாகக் குறைந்துகொண்டு போகிறது. வெற்றி பெறாத சந்தர்ப்பங்களில் தோல்வி மனப்பான்மை ஏற்படுகிறது.

எதற்காக சில பெற்றோர்கள் சர்வாதிகாரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்ற கேள்வியைப் பார்த்தால், அவர்களுடைய பெற்றோர்கள், சமூக அழுத்தம், அவமானம், வதந்திகள், இறுக்கமான சமூகக் கட்டமைப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்படியான பிள்ளைகள் வளர்ந்து வாழ்க்கையில் சிறப்பான தரத்தை அடைந்தாலும் உளநலப் பிரச்சனைகள் இருக்கக்கூடும். இன்னொரு பக்கத்தில், ஈடுபாடு காட்டாத பெற்றோர்கள் என ஒரு வகையினர், ஒற்றைப் பெற்றோராகவோ பல பிள்ளைகளைக் கொண்டவர்களாவோ பணப்பிரச்சனை அல்லது பல மணிநேர வேலை செய்பவர்களாகவோ இருக்கின்றனர். சிலர் தங்கள் சொந்தப் பெற்றோர்களைப் பராமரிக்கவேண்டியும் இருக்கலாம். இதனால் பிள்ளைகள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக உணரக்கூடும். காலப்போக்கில் இந்த உணர்வு தனிமை, ஆதரவின்மை, உளச்சோர்வு போன்ற உணர்வுகளாக மாறி போதைநாட்டத்திற்கு வழிவகுக்கலாம். இப்படியான சூழ்நிலையில் பெற்றோர்கள் கணிசமான அளவு நேரத்தைப் பிள்ளைகளுக்காக ஒதுக்கி சரியான நெறியைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். வெற்றி பெறும்போது பாராட்டவேண்டும். அதிகமாக அறிவுரை செய்வதோ சொற்பொழிவாற்றுவதோ கோபத்தையும் மனக்கசப்பையும் ஏற்படுத்தும். வலுவான பிணைப்பையோ நெருக்கமான உறவையோ ஏற்படுத்தாது. ஆகவே பதின்ம வயதினர், இளையோர் மற்றும் 20 வயது வரம்பைச் சேர்ந்தவர்கள் நான் குறிப்பிட்ட பிரச்சினைகளை அல்லது அறிகுறிகளைக் கொண்டிருந்தால் வசந்தத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.


MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
• Advanced function
• Calculus & vectors
• Data management
All Classes available in Scarborough & Stouffville


Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



கந்தசாமி முத்துராஜா

## வழிபாட்டுச் சடங்குகள்

ஊரிலுள்ள வெட்டுமுருகன், ஆத்தியடிப் பிள்ளையார் கோவில்களுக்கு வருடம் ஒருநாள் விசேட அபிஷேகமும் திருவிழாவும் நடைபெறும். வெட்டுமுருகன் கோவிலில் ஆனியிலும் ஆத்தியடிப் பிள்ளையார் கோவிலில் கோடையில் ஒரு நாளிலும் இத்திருவிழா நடைபெறும். ஒருநாள் திருவிழாவான அந்நாளில் பிராமணக் குருக்கள் பூசை செய்வார். அன்று விசேட அபிஷேகமும் அலங்கார உற்சவமும் நடைபெறும். அலங்கார உற்சவத்தின்பொழுது எழுந்தருளிச் சுவாமிக்குச் சாத்துப்படி சாத்தி உள் வீதி, வெளி வீதி கொண்டு வருவர். வெளி வீதியில் சுவாமியை சப்புறத்தில் கொண்டு வருவதும் உண்டு. இந்தத் திருவிழா நாளில் கோயிலில் கடலை, மணிலாக் கொட்டை போன்ற தின்பண்டங்களுடம் அழகு சாதனப் பொருட்களாகிய கண்ணாடிச் சாமான்களும் விற்கப்படும். ஊர் மக்கள் இயன்றளவு சந்தோஷமாக இருப்பர். சிகர சோடனை, அலங்கார வெளிச்சங்களும் அமைக்கப்படும்.

குழந்தைப்பேறு இல்லாதோர், அம்மை, சின்னமுத்து, கொப்பளிப்பான் நோய் வந்தோர், நெருப்புக்காய்ச்சல், செங்கமாரி, மங்கமாரி போன்ற நோய்கள் வந்து உயிருக்காகப் போராடியோர், நீண்டகாலம் வறுமையில் வாடுவோர், கோட்டில் வழக்காடுவோர் போன்றோர் அல்லது அவர்களது நெருங்கிய உறவினர், தமது துன்ப துயரங்கள் நீங்க வேண்டுமென்று கோயிலுக்கு நேர்த்தி வைப்பர். அங்கப் பிரதட்சணை, பாற்காவடி, தூக்குக்காவடி, செடில்காவடி, கரகாட்டம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்றவற்றைத் தெய்வத்துக்கு நேர்த்திக்கடன்களாகக் கொள்வர். வாயில் அலகு குத்தி, முதுகில் ஐம்பது முள்ளு நூறு முள்ளுச் செடில் குத்திக் காவடி ஆடுவர். அங்கப் பிரதட்சணை செய்தல், காவடி எடுத்தல், கரகம் எடுத்தல், பாற்செம்பு எடுத்தல், கற்பூரச் சட்டி எடுத்தல் என்றுதான் ஊரில் பேசிக் கொள்வர். பெண்கள் கன்னங்களினூடாக அலகைக் குத்தி பால்செம்பைத் தலையில் சுமந்து கோயிலை வலம் வருவர். சில பெண்கள் அலகுகுத்தித் தலையில் கற்பூரச்சட்டி சுமப்பர்.

ஆண்கள் கோயிலைச் சுற்றி உடல் உருண்டு அங்கப்பிரதட்சணை செய்வர். காவடி ஆடுவோர் தன்வயம் இழந்த நிலையில் கொட்டப்படும் பறையின் லயத்ததுக்கேற்ப ஆடுவர். அவ்வாறு ஆடும்போது முதுகில் குத்தப்பட்ட செடில்களின் கயிற்றை பிடித்துக்கொண்டு வருபவர் அதனை மிக லாவகமாகப் பிடிப்பார். குத்தப்பட்ட செடில் முதுகுத் தசையைப் பிய்த்துக்கொண்டு வரக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார். செடில் என்பது பிரார்த்தனைக்காக முதுகின் தோலிடை கொளுவப்படும். இரும்பு அல்லது செம்பாலான ஒரு கொக்கியாகும். அந்தக் கொக்கிகளின் அடிப்பாகங்களில் உள்ள கயிறுகளைச் சேர்த்து ஒன்றாக முடித்து அந்த முடிச்சினுள் ஏறத்தாழ பத்து அடி நீளங்கொண்ட பலமான வெள்ளைக் கயிற்றைப் பொருத்தி அதை ஒருவர் மிக்க சாதுரியத்துடன் பின்புறமாக நின்று பிடித்துக்கொண்டு வருவார். செடில் குத்தப்பட்ட இடத்தில் இரத்தக்கட்டி தோன்றாமலும் அதேவேளையில் சதையைப் பிய்த்துக்கொண்டு வராமலும் பார்த்துக் கொள்வது இந்தச் செடிற் கயிற்றைப் பிடிப்பவரின் பணியாகும்.



எழுந்தருளு திருமேனிக்குச் சாத்துப்படி செய்து அதனை அலங்கரித்து வீதி வலமாகக் கொண்டுவருவர். அப்போது அதன்பின்னால் பெண்கள் 'அடி அழித்து' வருவர். இதுவும் ஒருவகை நேர்த்திக் கடனாகும்.

ஆண்கள், பெண்ணுடை உடுத்திக் கரகம் எடுப்பர். கரகம் எடுப்பவர் கோயில் கிணற்றில் நீராடியபின் உடை உடுத்து, விபூதி சந்தனம் குங்குமம் பூசிக் கோயிலைக் கும்பிட்டுக் கரகம் எடுப்பதற்குத் தயாராவார். அவரது தலையில் தேங்காயை வைத்துப் பூசாரி மந்திரம் சொல்லிக் கொண்டே கத்தியினால் இரண்டாக வெட்டுவார். உதவியாளர் உடுக்கு அடித்து 'உரு' ஏற்றுவார். அப்போது கரகம் எடுப்பவரின் உடல் உரு ஏறி உதறும். உடனே, பூசாரி அவரது தலையில் கரகத்தைத் தூக்கி வைப்பார். கரகம் என்பது புனிதநீர் வைக்கும் குடம் அல்லது செம்பு என்பதைச் சுட்டும் (இராமநாதன், ஆறு 1999: 243). பின்னர் உடுக்கடிகாரர், கரகத்தைத் தலையில் தாங்கிய வண்ணம் கையில் வேப்பம் பத்திரத்தைப் பற்றிக்கொண்டே உடுக்கடியின் இசைக்கேற்றவாறு கால்பதித்து அசைந்தசைந்து வட்டமாக ஆடிவருவார். அவரைச் சுற்றி மக்கள் திரளாக இருந்து கண்டுகளிப்பர்.

இவ்வூர்க் கோயில்களில் நித்தியபூசை நடைபெறுவதில்லை. பூசை இல்லாத நாட்களில் கோயிலுக்குச் செல்வதைக் 'கோயில் கும்பிடுதல்' என்றுதான் சொல்வர். இத்தன்மை தென்னிந்திய நாட்டுப்புற மக்களிடமும் காணப்படுகிறது. 'திராவிடத் தெய்வங்களாகிய நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுவதைக் கோயில் கும்பிடுதல் என்று சொல்லுவர். இக்கோயில்களுக்கு நித்தியபூசை எல்லாம் நடத்தப்படுவதில்லை. மக்கள் விரும்பும்போது பூசை நடக்கும்' (இராமசாமி, து. 1985: 145).

வெட்டுமுருகனில் பெருங்கதைப்பூசை, திருவெம்பாவைப்பூசை, சித்திரைக் கஞ்சிப் பூசை என்பன சிறப்பாக நடைபெறும். ஆனியில் ஒருநாளில் சிகரசோடனையுடன் திருவிழாவும் ஐப்பசியில் கந்தசஷ்டி விரதமும் நடைபெறும். கந்தசஷ்டி விரத இறுதிநாளில் சூரன்போர் நிகழ்த்துவர். இக்கோயிலின் வளர்ச்சிகருதிக் 'கிழக்கூர்ச் சந்நிதி' என்று புனைபெயர் தற்போது வழக்கில் உள்ளது.

ஆத்தியடிப் பிள்ளையாரில் காப்புக்கட்டுப் பூசையும் கோடையில் திருவிழாவும் நடைபெறும். வீரபத்திரருக்குப் பண்டைய நாட்களில் வண்ணார்தான் பூசை செய்தனர். தற்போது கரையார் பூசை செய்கின்றனர். ஆனால் ஆண்டுப் பொங்கல் அபிஷேக நாட்களில் வண்ணார் நேர்ந்து வைத்துப் பொங்கி அவர்களது செலவில் பூசை நடத்துவதும் உண்டு.

அண்ணமார் கோயில்வழிபாடு காட்டுக்குள் இரண்டு இடங்களில் மரத்தின்கீழே நடைபெறுகின்றது. அங்கு பொல்லுக்கொட்டன் மட்டும்தான் சாத்தியிருப்பர். இவ்வழிபாடு பற்றிப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் எழுதியுள்ளார் (2996: 58). தமக்கு நிறைய மீன்பட வேண்டுமென்று சுட்டகருவாடும் கள்ளும் படைப்பர். நாட்டார் தெய்வங்களுக்குக் கள்ளும் சுட்டகருவாடும் படைக்கப்படுவதுபற்றி நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் பின்வருமாறு கூறப்படுகிறது:



ஓதியடி வீராடிவென்றும் உக்கிரமாடா
வென்றும்
பலீபெறுங் கறுப்பாவென்றும்
பாவாடைராயா வென்றும்
துதீபெறு மிருளாவென்றுந்
தொட்டியச்சின்னானென்றும்
மதுக்குடம் பிசிதம் வைத்தருந்தியே
வணங்குவாயே
பாடு- உன் கறுப்புத்தெய்வத்தைக்
கொண்
டாடு- கள்ளுசுள்ளுடன் பூசைகள் போடு.
(ஸ்ரீபன். ஞா 1999: 62)

அண்ணமாருக்கான கள்ளுப்படையற் பூசையை, வழமையாகக் (சூரியன் மறைந்த நேரம்) கருக்கல் நேரத்திலேயே செய்வர். அங்கு சமூகமளிக்கும் முதியவர் ஒருவர் பூசாரியாகக் கற்பூரம் காட்டிப் படையல் மாற்றுவார். பின்னர் அங்குவரும் அனைவருக்கும் கள்ளும் சுட்டகருவாடும் பரிமாறுவார். எல்லோரும் கருவாட்டைச் சாப்பிட்டுக் கள்ளைக் குடிப்பர். மறுநாள் கடலுக்குச் செல்வோருக்குச் சிலவேளை ஏராளமாக மீன் படுவதுமுண்டு.

தொடரும்...)




## மறப்போமோ மாவீரரை!



செந்தமிழ் நாடதைச் சீரழித்த அந்தச்
சிங்களப் பேய்களை ஒட்டிடத்தான்
நம்தமிழ்ச் செல்வன் நற்றமிழ்ப் பிரபா
நாடு மீட்க வந்திடவே
வெந்த புழுக்களாய் வேதனைப் பட்டவர்
வீறுகொண் டெழுந்தார் அவர்பின்னே
நொந்து துடித்தே நோய்தந்த சிங்களம்
நோய்தீர்க்க ஓடிய தயல்நாடே.

கரந்தடிப் போரே கைகண்ட மருந்தெனக்
காவற் றலைவன் கண்டு கொண்டான்
சிரம்மே பாராது சேர்ந்து கொண்டார்
செம்மொழி காக்கும் செம்மல் கள்தானே
உரங்கொண்ட தலைவனின் ஊக்கு சக்தி
ஊறில்லா ஒழுக்கம்சேர் உடற்ப யிற்சி
தரமுடைப் படையென தாமு ணர்ந்தே
தாக்கி யழித்ததே சிங்கப் படையை.

நல்லதோர் ஆட்சி அமைத்தா ரங்கே
நாடு சிறக்க நற்பணி கண்டார்
செல்வச் செழிப்பற்ற போதினி லங்கே
செழுமையால் மக்கள் செழிப்புற வாழ்ந்தார்
கல்லார்க்குக் கல்வி கலைகளு மாங்கே
கணினி முதலாம் தொழினுட்ப மாமே
செல்வத்தைச் சேர்க்கச் செய்தொழில் பற்பல
செந்தமி ழீழத்தில் செய்து கொண்டாரே.

புலியாட்சி கண்டோர் புளுங்கி நின்றே
புதுடில்லி சென்றங்கே உதவியுங் கேட்டே
வலிந்தெம்மை அழிக்கவும் ஆயத்த மானார்
வல்லர சாருமே வாய்ப்பளித் தாரே
கெலிமூலம் குண்டுபோட் டழித்த திந்தக்
கேவலத்தை கேட்கத்தான் யாரு மில்லை

சலிப்பில்லாப் புலிப்படை சலிக்க வில்லை
சாதனைகள் செய்தாரே இறுதி வரையே.

மகிழ்ச்சியோடு வாழ்ந்தோமே முப்ப தாண்டு
மகிழ்ச்சிக் குரியதந்தக் கார்த்திகை மாதமது
அகநிறை நிகழ்வுகளை அன்று கண்டோம்
ஆர்வமுடன் மக்களின் அணிவ குப்பு
சிகரமாய் நின்றவரின் ருத்தம்
சிறப்பளிக்கச் சீரான நடைமு றைகள்
தகவுடைக் கார்த்திகைப் பூக்க ளுக்குத்
தந்தார்கள் நடுகல்லும் மணிமண் டபமும்.

நாடொன்று வேண்டியே நம்மி ளைஞர்
நாற்பதாண்டாய்க் கோலோச்சி ஆட்சி செய்தார்
ஈடிணை யற்றதந்த ஈழவள நாட்டிலே
ஏறுபோல் வாழ்வதற்கு ஏற்ற தொன்றை
தேடியே கொள்வதற்குச் சேர்ந்தொன் றாகத்
தேர்ச்சியுள்ள தலைவர்கள் தலைமை தாங்க
வாடிடாத போராட்டம் வலிமை பெற்றால்
வலிந்துவந்தே பேச்செடுக்கும் வாளேந்து சிங்கமே.

முருகேசு மயில்வாகனன்

**படித்ததில் பிடித்தது**



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# பத்து வாழ்வியல் அனுபவங்கள்!

**செல்வகுமார்**

1. ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது சும்மா இருங்கள். சும்மா இருங்கள் என்று பொருள்படுவது தொலைக்காட்சி பார்ப்பதோ, face book பார்ப்பதோ, you tube பார்ப்பதோ அல்லது சமூக வலைதளங்களில் உலா வருவதும் whatsapp, viber போன்ற விடயங்களில் ஏனையவர்களுடன் பேசுவதோ இது எதுவுமே அதற்குள் அடங்காது. ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது சும்மா இருங்கள். அவ்வாறு சும்மா இருக்கின்ற அந்த நேரம் இருளாக இருந்தால் மிகவும் நல்லது. அதுவே தியானமாக இருந்தால் இன்னும் நல்லது.

2. உங்கள் மனதிற்கு எது தோன்றினாலும் இது சரி என்று உங்கள் மனது சொன்னால் இரண்டு முறை சிந்திக்காதீர்கள். உடனடியாக செய்து விடுங்கள். விளைவுகளைப் பிறகு பாருங்கள். அது உங்கள் ஆள்மனதிற்குச் சரியாகப் படவேண்டும்.

3. எந்த ஒரு விடயத்தையும் மூன்றாவது கண் கொண்டு பாருங்கள். உங்களுக்கு காட்டப்படுவது உங்களுக்கு புரிவது அல்ல அதை பகுத்து தொகுத்து உங்களுடைய ஆழ்மனதைப் பயன்படுத்தி மூன்றாவது கண் கொண்டு பகுத்து அறிந்து கொள்ளுங்கள்.

4. நாலு பேர் என்ன நினைப்பார்கள் என்று நினைப்பதை முதலில் மாற்றுங்கள். மற்றவர்களுக்காக வாழ்வதை முதலில் நிறுத்துங்கள். காரணம் இந்த நாலு பேர் என்பவர்கள் காலத்துக்கு காலம் மாறிக் கொண்டே இருப்பர். 6 வயதில் நாங்கள் விளையாடும் போது நாலுபேர் என்ன நினைப்பார்கள் என்று ஒரு விளையாட்டை செய்யாமல் போகிறோம் அல்லவா? அந்த நாலு பேர் அடுத்து 10 வயதில் இருக்க மாட்டார்கள். 18 வயதில் ஒரு பெண்ணை காதலிக்கிறேன். அந்தப் பெண் எனக்கு பிடித்திருக்கிறது. அவளை திருமணம் செய்து கொண்டால் வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்று நாம் நம்பும் போது நான்கு பேர் என்ன நினைப்பார்கள் என்று ஒதுங்குகிறோமா? 30 வயதில் திருமணம் நடந்திருக்காது அந்த நாலு பேரும் இருக்க மாட்டார்கள். நான்காவது நாலு பேர் என்ன நினைப்பார்கள் என்பதை நினைத்து வாழ்வதை முதலில் தவிருங்கள்.

5. பஞ்ச பூதங்களால் இந்த உலகம் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த பஞ்ச பூதங்கள் நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ. இந்த ஐந்து பூதங்களும் மனித உடலுக்கும் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்குப் புரிய வையுங்கள். அண்டத்தில் இருக்கிறதுதான் இந்தப் பிண்டத்தில் இருக்கிறது. இந்தப் பிண்டம் என்ன நினைக்கிறதோ அதனை அண்டம் செய்தே தீர வேண்டும். இதை மறந்து விடாதீர்கள்

6.ஒரு நாளைக்கு ஒரு முறையாவது அறுசுவை உணவு உண்ணுங்கள். அதில் துவர்ப்பும் கசப்பும் கட்டாயம் இருத்தல் வேண்டும். காரணம் இன்று கசப்பே பார்க்காத ஒரு தலைமுறை வளர்ந்து விட்டது. வாழ்க்கையை உண்மையாக நேசிக்க வேண்டுமென்றால் ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது அறுசுவை உணவை உண்ணுங்கள்.

7. ஏழேழு ஜென்மங்கள் வாழ்வதாக எனக்குத் தெரியவில்லை. ஏழேழு ஜென்மங்களுக்கும் சேர்த்து இன்றே வாழ்ந்துவிடுங்கள்.

8.இரவு எட்டு மணிக்கு எல்லாம் என்ன அவசரமாக இருந்தாலும் சரி, என்ன தேவையாக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய பிரச்சனை யாக இருந்தாலும் சரி உங்களுடைய தொலை பேசி, உங்களுடைய laptopஇனை மூடி தொலைக்



காட்சியை நிறுத்திவிட்டுத் தூங்கி விடுங்கள். பத்து மணிக்கெல்லாம் நல்ல தூக்கம் வரும். ஆழ்ந்த உறக்கம் அப்போதுதான் வரும். இந்த உலகத்தையும் இருளையும் பார்த்துத்தான் தலைமுறை வளர்ந்து விட்டது. மறந்துவிடாதீர்கள். எட்டு மணிக்கெல்லாம் எல்லாத்தையும் தூக்கித் தூர போட்டுவிடுங்கள்.


9. எந்தவிதமான தொழில் நுட்ப அறிவும் இல்லாத ஒரு காலத்திலே சட்டலைட்டுக்களோ பெரிய பெரிய விஞ்ஞான வளர்ச்சியும் இல்லாத காலத்திலேயே தமிழன் நவகிரகத்தை எப்படிக் கண்டுபிடித்தான் என்று தேடுங்கள். எப்பேர்பட்ட குடியில் நாங்கள் பிறந்திருக்கிறோம் என்பது புரியும்.

10. உலகத்தின் கடிகாரங்கள் விற்கப்படாத கடிகாரங்களில் எல்லாமே 10:10 என்று நிற்கிறது ஏன்? இந்த உலகம் யாரால் இயக்கப்படுகிறது. ஏன் இயங்குகிறது என்ற மொத்த வரலாறும் திரும்ப வரும். இந்தப் பத்தும் நம் வாழ்வியல் அனுபவங்கள்.



















# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

# 416.298.2777

# $375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5